# சாயி மார்க்கம்

ஜனவரி - ஜூன்
2024



இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின்
தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெற்றோரியல் கருத்தரங்கு (பொன்னம்மா கிராமம்) - வடபிராந்தியம்



6.7.2024
சத்திய சாயி ஆன்மீக கல்வி மாணவர்களின் ஆன்மீகச் சுற்றுலாவும் கடற்கரை சுத்தப்படுத்தலும் - வட பிராந்தியம்



ஏகாதச ருத்ர மகா யாகம் - வட பிராந்தியம்



கடற்கரை தூய்மைப்படுத்தல் அக்கரை கடற்கரை - பருத்தித்துறை - வடபிராந்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி மார்க்கம்
# Sai Markam

மலர்: 31
இதழ்: 72

ஜனவரி
ஜூலை
2024

## உள்ளே......

**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**
திரு.S.R. சரவணபவன்
தொ.பே - 021 222 5442


- நிலை மாற்றம் நிலை ஏற்றத்திற்கே 2
- தந்தைக்கு மகனின் உயிர்த்தியாகம் 4
- இராமாயாணணத்தில் இலக்குமணனைப் பற்றி 6
- பக்தனுக்கும் சூட்சுமநிலை பகவானுக்கும் இடையில் 8
- மெய் உணர்தல் 11
- அருவம் - உருவம் 13
- இவர்கள் அறிவற்றவர்கள் 14
- **Dr. Nawwaf Al Shibliss** 15
- எனது வாழ்வில் சுந்தரமான தொழில் கிடைத்தது 16
- வரும் ஏற்றுக்கொள் - தரும் பெற்றுக்கொள் 18
- பாலவிகாஸ் கல்வியினால் பெற்ற நன்மை 19
- SSIO மாநாடு - கென்யா 20
- சாயியின் மகா வாக்கியங்கள் 22


இலங்கையில் தனிப்பிரதி ரூபா 100.00
வருடச் சந்தா ரூபா 250.00

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
166/5, சேர்.பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**காசோலை:**
Sathiya Sai International Organization – Northern Region
A/C No: 86002792
**SWIFT CODE: BCEYLKLXXXX**
Bank of Ceylon - Thirunelvely,
Jaffna, Sri Lanka.

சத்யம் தர்மம் சாந்தி பிரேமை அஹிம்சை


**ஒரே ஒரு மதம் அது**
**அன்பென்னும் மதம்**

**இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் தமிழ்ச் சஞ்சிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தலையங்கம்

# நிலைமாற்றம் ! நிலை ஏற்றத்திற்கே !!



படைக்கப்பட்டவை அனைத்தும் மூன்று நிலைகளிலுள்ளன. உதாரணமாக நீர் கட்டியாகவும் நீராகவும் நீராவியாகவும் மாறலாம். கட்டியிலும் பார்க்க நீருக்கும், நீரிலும் பார்க்க நீராவிக்கும் பன்மடங்கு அதிக சக்தியுண்டு. எல்லாப் பொருட்களிற்கும் ஸ்தூல நிலை (பௌதீக நிலை), சூட்சும நிலை (சக்தி நிலை), அதிசக்தி அல்லது காரண நிலையுண்டு. மனிதனிலும் உடம்பு நிலை (பௌதீக நிலை), சூட்சும நிலை (சக்தி நிலை), காரண நிலை (பரமாத்மா நிலை) என மூன்று நிலைகள் உள்ளன. உடல் நிலை வரையறுக்கப்பட்டது. சூட்சும நிலையில் எங்கும் பரவும் தன்மையும் சக்திகூடிய தன்மையுமுள்ளது. எமது உடம்பும் பரபிரஹ்ம நிலையிலிருந்து அதன் சங்கல்ப்பத்தினால் மனோ, பிராண நிலைக்கு இறங்கிக் கடைசியாக ஸ்தூல நிலையான உடம்புடன் பரிணமிக்கின்றது.

கராத்தே, குங் வ்வு ஆகிய தற்பாதுகாப்பு வீரநிலைப் பயிற்சியிலீடுபட்டவர்கள் சாதாரண ஒருவரின் உடம்பு சக்தியிலும் பார்க்க, தங்கள் சூக்சும நிலையிலிருந்து அபார சக்தியை வெளிக் கொணர்வார்கள். மேலைநாட்டு வைத்தியத்தில் ஸ்தூல உடம்பையே பெரும்பாலும் கவனிக்கிறார்கள். சிறிதளவு மனோ நிலையையும் (Mental Energy) கவனிக்கப்படுகிறது.

ஆயுர்வேதம்,அக்குபங்சர் (Acupuncture), றெய்க்கி (Reki) ஆகிய வைத்திய முறைகளில் சூட்சும உடம்பையே கவனிக்கிறார்கள். இவர்கள் சக்திநிலையில் சமநிலை குலைந்தால் நோய்வாய்ப்பட்டு சமநிலையை ஸ்தாபித்ததும் நோய் தீர்ந்துவிடும் என்ற கோட்பாட்டைக் கொண்டவர்கள். இம்மாதிரி மூன்று நிலைகளையும் ஆன்மீகத்தில் உடம்பு, மனம், ஆத்மா என்று பிரித்து விளங்குகின்றோம்.

மரணிக்கும் பொழுது பிராணமய கோசம், மனோமய கோசத்தில் அடங்கி, விக்ஞானமயம், ஆனந்தமயமாகிய கோசங்களுடன் வெளியேறுகிறது. ஆகவேதான் ஆவி நிலையிலும் ஓரளவு பூகோளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்பவர்களின் மனோநிலையுடன் தொடர்பு கொள்ள முடியும். ஆன்மீக மகான்கள் தங்களின் பக்தர்களுடன் மனோநிலையில் வழி காட்டுவார்கள்.

பகவான் பௌதீக உடலை நீத்தது துன்பமயமான நிகழ்வா? அல்லது மகிழ்ச்சிகரமான நிகழ்வா?. சுவாமி எப்போதும் தேகாபிமான நிலையிலிருந்து ஆத்மாபிமான நிலைக்கு உயர வேண்டும் என்று கூறியுள்ளார். 24ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2011ஆம் ஆண்டு ஜீவன் நிலையிலிருந்து பிரஹ்ம (விஸ்வரூப) நிலைக்கு மாறியுள்ளார். இது ஒரு மகிழ்ச்சியான உயர்நிலை மாற்றமாகும். ஆகவே தான் இந்நாளை ஆராதனா மகோற்சவ தினம் என்று ஆன்மீக சாதனைகளில் ஆனந்தத்துடன் தீவிரமாகப் பங்கு கொள்கிறோம்.

ஏன் உடலைக் குறிப்பிட்ட (96 வயது) வயதிற்கு முன் தனது விருப்பத்தினால் 11 வருடத்தால் குறைத்து வெளியேறினேன் என்று விளக்கியுள்ளார். பக்தர்களின் கர்மவினைகளை தமது உடலிற்கு எடுத்துக்கொண்டதால் உடல்நிலை மிகவும் மோசமாக சீர் குலைந்த படியால்தான் விடுவதற்கு சங்கல்ப்பித்தேன் என்று கூறியுள்ளார்.

தான் தனது நிலையை உயர் நிலைக்கு மாற்றியதே ஒழிய பக்தர்களைக் கைவிட வில்லை. கனவிலும் நேரடியாகக் காட்சி கொடுத்தும், **"நான் ஒரு இடமும் போகவில்லை. நான் உங்களுடனேயே இருக்கிறேன்"** என்று உறுதிப்படுத்தியுள்ளார். இன்னமும் எழுத்து மூலமாகவும், பூ விழுவது, மாலை வளர்வது, விபூதி படத்தில் தோன்றுவது போன்ற அற்புதங்களால் தன்னை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கிறார்.

சுவாமியின் பிரசாந்தி நிலையம், கல்வி நிறுவனங்கள், வைத்திய சாலைகள், குடிநீர்த் திட்டங்கள், கிராம முன்னேற்ற செயற்பாடுகள் ஒரு குறைவுமின்றி நடைபெற்றுக் கொண்டே யிருக்கின்றன.

தன்னலமில்லாத சேவையுடன் தீவிரமான நம்பிக்கையையும் வைத்தால் சுவாமி எங்களுடன் தொடர்பு கொள்வார்.
சுவாமி கூறியுள்ளார், "கண்ணுக்குப் புலப்படாததே நித்தியமானது. பௌதீக உருவத்தில் பற்று வைக்க வேண்டாம். பௌதீக நிலைக்கப்பால் என்னை அனுபவிக்கவும் நான் எப்போதும் உங்களைச் சுற்றியே இருப்பேன். எனக்கு சூக்சும நிலை தேவைப்பட்டது. நான் வந்த வேலை முடியவில்லை. உங்களைத் தூய்மையாகவும் தன்னலமில்லாதவர்களாகவும் வைத்திருங்கள். ஏனென்றால் உங்களைக் கருவியாக உபயோகிப்பேன். எனக்கு உடம்பில்லாவிட்டாலும் உங்களின் உடம்பு எனது வேலையைச் செய்யும். உங்களின் கைகளே எனது கைகளாக இருக்கும். உங்களின் பாதங்களே எனது பாதங்களாகும். உங்களின் சொற்களே எனது சொற்களாகும். உங்களின் செயல்களே எனது செயல்களாகும். உங்களின் வாழ்வே எனது செய்தியாகும். ஒரு பொன்னான காலம் மலரப் போகின்றது. உலகம் முழுவதும் சாயி மயமாகும். கெதியில் இன்னொரு உடம்பில் பிரேமசாயியாக அவதரித்து உங்களை வழிநடத்துவேன். நான் மனித உடம்பு எடுத்திருக்காவிடில் தெய்வீகம் என்றால் என்ன என்பதை அனுபவித்திருக்கமாட்டீர்கள். தெய்வீகம் என்றால் அன்பு, கருணை, தூய்மையானவையேயாகும்.

முன்னர் எனது தரிசனத்தின்போது நீங்கள் தியான நிலையை அடைந்தீர்கள். எல்லாவற்றையும் மறந்து என்னிலேயே மனதை வைத்தீர்கள். இனிமேல் ஆழ்ந்த தியானத்தின் போதுதான் எனது தரிசனத்தை பிரேமையை அனுபவிப்பீர்கள். **நான் உங்கள் மூலமாகவே வாழ்வேன்.** அதாவது நீங்கள் அனைவருக்கும் அன்பைப் பகிர்வதன் மூலமாகவே நான் வாழ்வேன். இதுதான் எனது முக்கிய செய்தி".

"அனைத்தையும் நேசித்து ;
அனைத்திற்கும் சேவை செய்"

"எப்போதும் உதவி செய் ;
ஒருபோதும் தீங்கு செய்யாதே"

9 ஒழுக்கக் கோட்பாடுகளையும் 10 கட்டளைகளையும் வாழ்க்கையில் பின்பற்றினால், உலகில் சாந்தியும் ஆனந்தமும் நிலவும்.

"சமஸ்த லோகா சுகினோ பவந்து"

இதுவே எமது பிரார்த்தனை. சத்திய லோகம் மேன்மேலும் விருத்தியடையும்.

ஜெய் சாயிராம்

- ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தைக்கு மகனின் உயிர்த் தியாகம்

அன்பன் வைத்திய கலாநிதி சண்முகம் சிறீதேவா 1982ஆம் ஆண்டு புட்டபர்த்தியில் சுவாமியின் தரிசனத்தை முதன்முதலாக அனுபவித்தார். அவர் அப்போது இலண்டனில் வசித்தார். அங்கே ஒக்டோபர் மாதம் 1981ஆம் ஆண்டு சுவாமியைப் பற்றி அறிந்தார்.

சுவாமியின் தரிசனம் அவரின் அருளுரைகள், புட்டபர்த்தியிலிருந்த அமைதியான சூழல் எல்லாமே கடவுளைக் கண்டுவிட்டேன் என்றே நினைத்தேன். இலங்கை திரும்பியதும் எனது 8 வயது நிரம்பிய நிறோஷனை பாலவிகாஷ் வகுப்பில் (கொழும்பு) சேர்த்தேன். அவர் மீன், நீரில் துள்ளிக் குதித்து வாழ்வதுபோல் பஜனை, தபேலா வாசித்தல், ஹார்மோனியம் வாசித்தல் போன்றவற்றில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். அவர் என்னுடன் புட்டபர்த்தி சென்று 1984ஆம் ஆண்டு சுவாமியின் தரிசனத்தைப் பெற்றார். அவர் சுவாமிதான் தனது நோக்கு என்று தீர்மானம் எடுத்து உன்னத மாற்றத்தை அடைந்தார். தனது அறையில் எல்லாப் பக்கமும் சுவாமியின் படங்களால் நிரப்பினார். அன்றிலிருந்து அசைவ உணவைக் கைவிட்டார்.

அவர் பாலவிகாஷ் சகல நடவடிக்கைகளிலும் தீவிரமாக ஈடுபட்டார். முன்னாள் ஜனாதிபதி மதிப்பிற்குரிய ஜே. ஆர். ஜெயவர்த்தன அவரிடமிருந்து பகவான் ஷீரடி சாயி பாபாவின் பாத்திரத்தைத் திறமையாக நடித்ததற்காக புகழ்ந்ததும் அவர் ஆனந்த நிலையை அடைந்தார். இளைஞர் அணியிலிருக்கும்போது புட்டபர்த்தி, வைற்பீல்ட் ஆகிய இடங்களுக்கு அடிக்கடி போனார். அங்கே ஏதாவது இடத்தில் (உணவகம்) சேவாதளாக கடமை புரிவார். ஒருமுறை சுவாமி விபூதி கொடுத்து நேர்காணலும் கொடுத்தார். அப்போது நிறோஷன் இலங்கையில் இளைஞர் அணியை நிறுவுவதற்காக சுவாமியிடம் ஆசீர்வாதம் வேண்டினார்.

அவர் கொழும்பு திரும்பியதும் இளைஞர் அணியை உருவாக்கி அதன் தலைவராகவும் சேவையாற்றினார்.

மானிட சேவையே மாதவ சேவை என்பதில் ஆர்வம்கொண்டு தான் இருதய நிபுண வைத்தியனாகப் படித்து சேவை செய்யவேண்டுமென்று கடினமாக உழைத்தார். அவர் மக்களின் இதயங்களை சுவாமியின் அன்பினால் நிரப்பவேண்டுமென்பதையே குறியாக வைத்திருந்தார். ஒரு புள்ளிக் குறைவால் மருத்துவ தேர்வு கிடைக்கவில்லை. திகைத்துப் போனாலும் தந்தையாரை புட்டபர்த்தி கூட்டிச் செல்லுமாறு கேட்டார்.

புட்டபர்த்தியைச் சேர்ந்ததும் சுவாமியின் தரிசனத்திற்கே ஓடிப்போய் முன்வரிசையில் இருந்தார். சுவாமியின் தரிசனத்தினால் ஆனந்தக் கண்ணீர் இருவருக்கும் பெருகியது. பஜனை நடந்தது. நான் சுவாமியிடம் மகனுக்கு மருத்துவத் தேர்வு கிடைக்க வேண்டுமென்று இதயபூர்வமாக வேண்டினேன். அன்றிரவே நாம் புறப்பட்டு இலங்கையை வந்தடைந்தோம்.

இரு கிழமைகள் கடந்தன. ஓரிரவு நடுநிசியில் தொலைபேசி அடித்தது. அதை எடுத்ததும் **"இந்தத் தொலைபேசி அழைப்பு புட்டபர்த்தியிலிருந்து வருகிறது. உனது மகன் மருத்துவக் கல்விக்குத் தெரிவு செய்யப்படுவார்"** என்று தெளிவாகக் கேட்டது. இந்த ஆனந்தமான செய்தியை மகனை உடனே எழுப்பி அவருக்கு சொன்னேன். மகனும் ஆனந்தக் கண்ணீர்விட்டு சுவாமிக்கு நன்றி தெரிவித்தார். இரண்டு நாட்களுக்குப் பின்பு மருத்துவக் கல்லூரியிலிருந்து கடிதம் வந்தது. ஒரு மாணவன் தன் இடத்தை விட்டதால் உம்மைத் தெரிவு செய்துள்ளோம் என்றே அதில் எழுதப்பட்டிருந்தது.

ஜெயவர்த்தனபுர மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து, படிப்புடன் சகல சாயி நிலைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். சகமாணவர்களை புதிய மாணவர்களின் மீது விநோத வன்முறை செய்யவேண்டாமென்று அன்பாகச் சொல்லித் திருத்தினார். கிராமங்களில் மருத்துவ சேவைகளில் ஈடுபட்டார். கிரமமாக நகர சங்கீர்த்தனத்தில் ஈடுபட்டார். புற்று நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தேவையான உதவிகளைச் செய்தார். சுவாமியின் பிறந்த தின விழாவிற்கு சகமாணவர்களை அழைத்து வருவார்.

நான் குடும்ப மருத்துவச் சிகிச்சையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டிருந்தேன். வாழ்க்கை ஆனந்தமாக ஓடியது. கொள்ளுப்பிட்டியில் 3 அடுக்கு மாளிகையான வீட்டில் வசித்தோம். நிரோஷன் தனது கடைசி வருடப் படிப்பில் கவனம் செலுத்தினார்.

நாங்கள் **2001ஆம் ஆண்டு** ஜுலை 5ஆம் திகதி குரு பூர்ணிமா நிகழ்வில் கலந்து கொண்டோம். நாம் வீட்டில் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு அமைதியாகத் தூங்கினோம். **ஜுலை 6ஆம் திகதி** அதிகாலை 3.00 மணிக்கு இரு கள்வர் கூரிய ஆயுதங்களுடன் வீட்டிற்குள் நுழைந்தார்கள். அவர்கள் போதையில் இருந்ததாகத்தான் தெரிந்தது. என்னை ஆயுதத்தால் தாக்கும் பொழுது நிரோஷன் அவர்களின் பிடியிலிருந்து விடுபட்டு என்னைக் காப்பதற்காக ஓடி வந்தான். வீட்டில் கூக்குரல் எழும்பியதும் அவர்கள் நிரோஷனை நெஞ்சில் ஆயுதத்தால் குத்திவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். மகன் சுவாமியின் படம் தூக்கப்பட்டிருந்த சுவரில் சாய்ந்து புன் முறுவலுடன் இரத்தப் பெருக்கால் சோர்வடைந்தார். நான் அவரை என் மடியில் வைத்து இரத்தப்பெருக்கை நிற்பாட்ட முயற்சி செய்தேன். மகனோ வலியால் அழவுமில்லை. எனது மடியிலேயே இறுதி மூச்சை விட்டார். அவரின் தியாகம் அளப்பரியது.

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி நிரோஷனின் பிறந்தநாள். அவரின் தியாகத்தையும் வாழ்வைப் பற்றியும் சிறு புத்தகம் வெளியிட்டேன் (Vision of Niroshan). அதே ஆண்டு மே மாதம் இரண்டு புத்தகங்களுடன் புட்டபர்த்திக்குச் சென்றேன். நான் புத்தகங்களில் ஒன்றைத் தபாலில் போட்டுவிட்டு இன்னொன்றை என் மடியில் வைத்தபடி தரிசனத்திற்காக உட்கார்ந்திருந்தேன். சுவாமி என் அருகில் வந்ததும் கைவிரலால் புத்தகத்தை சுட்டிக்காட்டி, **"அவர் என்னுடன் சேர்ந்துவிட்டார்"** என்று சொன்னதும் நான் திருப்தியும் ஆனந்தமும் அடைந்தேன்.

நிரோஷன் தான் விரும்பிய இடத்தை சேர்ந்து விட்டான். ஒரு இலட்சிய சாயி இளைஞனாக வாழ்ந்து காட்டினார்.

அவருடைய தியாகம், மனித சேவை, நல்ல பண்புகளைப் பற்றி பலர் என்னிடம் கூறியுள்ளார்கள். விழாக்களில் மீதியாயிருந்த உணவை வீணாக்காமல் பசியுடன் தெருவில் இருப்பவர்களுக்குக் கொடுத்துவிட்டே வீடு திரும்புவார். அகண்ட பஜனை, சிவராத்திரி தினங்களில் தொடர்ந்து பாடிக்கொண்டும் வாத்தியங்களை வாசித்துக் கொண்டுமிருப்பார்.

**இவரின் பாலவிகாஷ் குருமாரும் அடியவர்களும் சேர்ந்து, "நிரோஷன் நினைவு விருது" ஒன்றை வருடாவருடம் சிறந்த பாலவிகாஷ் மாணவருக்கு அளிப்பார்கள்.**

நான் சுவாமியின் சிரித்த முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் நிரோஷன் சிரிக்கிறார் என்றே நினைப்பேன்.

ஜெய் சாயிராம்

நன்றி : வைத்திய கலாநிதி சண்முகம்
சிறீதேவா


## தேசிய சேவைத் திட்டம்



**புற்றுநோயாளர் காப்பகம்**
**ஹன்வல, மகரகம**

**வைத்திய சேவையை நோக்காகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் புற்று நோயாளர் காப்பகம் மகரகமவிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள ஹன்வல எனும் இடத்தில் அமைந்துள்ளது. இதில் வழங்கப் படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 715 678 332
E mail - info@ssiosrilanka.org
Web: www.ssiosrilanka.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமாயணத்தில் இலக்குமணனைப் பற்றிய சில கருத்துக்கள்

இராமாயணம் என்பது வால்மீகி முனிவரால் அருளப்பட்டது. இது இதிகாசங்களில் ஒன்றாகும். இது அறம், பொருள், இன்பம், வீடு முதலிய வாழ்க்கைத் தத்துவங்களை எமக்கு பாத்திரங்கள்மூலம் எடுத்துக் காட்டுகின்றது.

அவற்றுள் சகோதரத்துவத்திற்கு இலக்கணமாக விளங்குகின்றார் இலக்குவணன். அவர் தனது பிறப்பிலிருந்து இறுதி மூச்சுவரை ஸ்ரீராமரை தனது அவயத்தாலும் இதயத்தாலும் எண்ணி, வணங்கி, போற்றி, சுமந்து வாழ்ந்தவராவார்.

மாபெரும் பேர் இராச்சியமான அயோத்தியை ஆண்ட பேரரசன் தசரதனுக்கு மூன்று இல்லத்தரசிகள். கோசலை, சுமித்திரை, கைகேயி ஆகிய மூவருக்கும் நெடுங்காலமாக குழந்தைப்பேறு இல்லாமையினால் தசரதன் வாடினான். வசிட்ட முனிவரை நாடி, புத்திர காமேஷ்டி யாகத்தை பூர்த்தி செய்து யாகத்தின் பயனாக இறைபாயாசத்தை பெற்று மூன்று மனைவியருக்கும் பகிர்ந்தளித்தான். மூன்று மனைவியரும் கருவுற்றனர். முதல் மனைவிக்கு ஸ்ரீராமரும் சுமித்திரைக்கு இலக்குமணனும் சத்துருக்கனும் கைகேயிக்கு பரதனும் அவதரித்தனர்.

அன்பே உருவானவர் ஸ்ரீராமர். அவரை பாதுகாக்கும் கவசமானவராக இலக்குமணன் விளங்குகின்றார் என்பதனை எடுத்துக் காட்டுக்களாக இராமாயணத்தில் பின்வருவன அமைகின்றன.

இலக்குமணன் தனது குழந்தைப் பராயத்தில் தொடர்ந்து அழுதுகொண்டே இருந்தார். செய்வதறியாது தசரதன் வசிட்ட முனிவரின் ஆலோசனைப்படி ஸ்ரீராமரையும் இலக்குமணனையும் ஒரே தொட்டிலில் தாலாட்டினர். இலக்குமணனின் அழுகை நின்றது. இச்சம்பவத்தில் எமக்கு கண்கூடாக தெரிவது இலக்குமணன் தன் தாயின் அரவணைப்பைவிட ஸ்ரீராமரின் அமைதி, அன்பு, அரவணைப்பையே வேண்டுகின்றார். அதேநேரம் அவர் ஸ்ரீராமரிற்கு குழந்தைப் பராயத்தில் இருந்தே ஒரு காவலனாக வாழ்ந்துள்ளார். அவரை என்றும் பிரிந்து இருந்ததே இல்லை.

அடுத்ததாக சீதாபிராட்டியின் சுயம் வரத்தின் போது ஸ்ரீராமர் சிவதனுசை தூக்கி நாணேற்றும் போது சிவதனுசு ஒடிந்தது. சினமுற்று உதித்தார் பரசுராமர். அவரைக்கண்டு இலக்குமணனை தவிர அனைவரும் அஞ்சினர். இலக்குமணன் விஷ்ணுவின் ஒரு அவதாரத்தை பாதுகாக்க மற்றோர் அவதாரத்தை எதிர்த்தவர் ஆவார். இதிலிருந்து இலக்குமணனின் வீரமும் சகோதரனுக்காக எந்தத் தியாகத்தையும் செய்யும் மனப்பாங்கும் வெளிப்படுகின்றது.

அடுத்ததாக ஸ்ரீராமரின் பட்டாபிஷேக தறுவாயில் பதின்னான்கு ஆண்டுகள் காடாளுமாறு இராமரை தசரதன் பணித்தார். அதையறிந்த இலக்குமணன் தன் தந்தையையே எதிர்க்க முன்வந்தார். ஆனாலும் தந்தை சொல்லை சிரமேற்று நடக்க வேண்டுமென ஸ்ரீராமர் கூறியதற்கு இணங்கி அவர் ஸ்ரீராமரை பிரியாமல் கூடவே சென்றிருந்தார். இதிலிருந்து இலக்குமணன் மண்ணாசை, பொன்னாசை அற்றவர் என்பது தெரிகின்றது. அவர் நினைத்திருந்தால் அயோத்தியில் ஆடம்பரமாக வாழ்ந்திருக்கக் கூடும். ஆனால் அவர் அவதரித்தது அதற்கல்ல. ஸ்ரீராமரைப் பாதுகாக்கவே.

மேலும் வனவாசத்தின்போது இராமாய ணத்தின் திருப்பு முனையாக அமைந்தது சூர்ப்பனகைக்கான தண்டனை ஆகும். இராவணனின் தங்கையான சூர்ப்பனகை இராமஇலக்குமணன் மீது கொண்ட மையல். இந்த தகாத ஆசைக்கு தண்டனை வழங்க ஸ்ரீராமர் இலக்குமணனைப் பார்த்து ஆகாயத்தை நோக்கி ஒரு விரலை உயர்த்தி குறிப்புக்காட்ட குறிப்பறிந்த இலக்குமணன் சூர்ப்பனகையின் மூக்கினையும் காதுகளையும் ஒரே வெட்டினால் வெட்டினார். இவ்வாறு சகோதரரின் மனதறிந்து நடக்கும் உன்னதமான தம்பி இலக்குமணன் ஆவார். உலக நன்மைக்காக செயற்கரிய பல செயல்களை இவர் செய்துள்ளார்.

ஒருபொழுது ஸ்ரீராமபிரான் சீதா பிராட்டியாரை தேடிச்சென்ற போது கண் டெடுக்கப்பட்ட சில நகைகளை காட்டி சீதா பிராட்டியாரினதா என இனங்காணுமாறு இலக்குமணனை பணித்தார். இலக்குமணனால் சீதாபிராட்டியாரின் மெட்டியினை மட்டுமே இனங்காண முடிந்தது. இதிலிருந்து நாம் அறிவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்குமணன் தனது மனைவி ஊர்மிளாவை தவிர எந்தவொரு பெண்ணையும் ஏறெடுத்துப் பார்த்ததில்லை. இலக்குமணன் பெண்மையில் மிகுந்த மரியாதை உடையவர் என்பதையும் அறிவோம். அத்துடன் தனது அண்ணியாரான சீதாபிராட்டியாரை தாயைப் போலவும் தனது அண்ணனான ஸ்ரீராமரை தந்தை போலவும் எண்ணி பேணியதனாலேயே தினசரி பணிந்து வணங்கும்போது சீதாதேவியின் பாதங்களைத் தவிர வேறெதுவும் அவர் அறியவில்லை.

யுத்த காண்டத்தில் இராவணன் சிறந்த இராம பக்தரில் ஒருவரான விபீஷணரிற்கு எதிராக இராவணன் வேல் எய்தபோது அவரை காப்பாற்ற இலக்குமணன் அவ்வேலை மார்பில் ஏந்தினார்.

இதிலிருந்து நாம் அறிவது இலக்குமணன் இராமன் தவிர இராம பக்தர்களை கூட தனக்கு மேலாகவே நேசிக்கும் பண்புடையவர் ஆவார்.

ராமகதாரச வாஹினியில் இலக்குவணனின் முடிவு பற்றி எமது அன்பிற்குரிய பகவான் கூறும் வேளையில் சகோதர சேவையே உயிர்மூச்சென வாழ்ந்த ஆதிஷேச அவதாரமான இலக்குவன்: இராமராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் த்ரேதாயுகம் முடிவுற்று த்வாபரயுகம் ஆரம்பமாகும் தறுவாயில், யுகதர்மங்களைப் பற்றி உரையாடுவதற்காக ஒருமுறை இயமனும் ஸ்ரீராமரும் அந்தரங்க ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது இந்த இரகசிய ஆலோசனையில் யாரும் தடங்கல் செய்யக் கூடாது. மீறி யாராவது உள்நுழைந்தால் அவரது தலையை துண்டிக்க வேண்டுமென இலக்குமணனை ஸ்ரீராமர் காவலுக்கு அமர்த்தினார். அப்போது ஸ்ரீராமரை தரிசிப்பதற்காக துர்வாச முனிவர் வருகைதர அவரைத் தடுத்தார் இலக்குமணன். இதனால் சினமடைந்த துர்வாசர் இந்த நாட்டையே அழிப்பேன் என கூற நாட்டு மக்களின் நன்மைக்காகவும் யுகதர்மத்தை பேணுவதற்காகவும் உலகத்தின் சுபீட்சத்திற்காகவும் இலக்குவன், தானே அந்த ஆலோசனை அறையில் உள்நுழைந்து இடையூறினை ஏற்படுத்த அவரின் தலை துண்டிக்கப்பட்டு அவதார நோக்கம் நிறைவேறி வைகுண்டம் அடைந்தார். இப்படிப்பட்ட தியாகத்தை புரிந்தவரே இலக்குமணன்.

அதன் பின்பு இராமரும் லவகுசனை அரசனாக்கிவிட்டு சரயு நதியில் மூழ்கி வைகுண்டம் அடைந்தார்.

இவ்வாறு அதர்மம் தழைத்தோங்கி தர்மத்தை நிலைநாட்ட இறைவன் மனித வடிவில் பூவுலகில் அவதரித்து மனிதர்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களையும் விழுமியங்களையும் வாழ்ந்துகாட்டி சென்றிருக்கின்றனர்.

ஆகவே நாமும் இராமாயணத்தில் இலக்குமணர் மூலம் அன்பு, தியாகம், நேர்மை, சகோதரத்துவம், தர்மம் என்பவற்றை முன்னுதாரணமாகக் கொண்டு வாழ்வில் அவற்றைக் கடைப்பிடித்து உயர்வடைவோமாக.

ஜெய் சாயிராம்

சி. வேணுபவன்,
பாலவிகாஷ் மாணவன்,
யாழ். சாயி நிலையம்.






சத்திய சாயி பாடசாலை -மானிப்பாய் - யாழ்ப்பாணம்

கல்வி சேவைத்திட்டத்தை நோக்காக கொண்டு இலங்கையின் முதலாவது சத்திய சாயி பாடசாலை யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் சுவாமியின் ஆசியுடன் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆண்டு 1 தொடக்கம் 11 வரை வகுப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 180 பிள்ளைகள் கல்வி பயில்கின்றார்கள்.
இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: +94 21 225 5086
E mail - info@ssiosrilanka.org
saischool@ssiosrilanka.org
Web: www.ssiosrilanka.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பக்தனுக்கும் சூக்சும நிலை பகவானுக்கும் இடையில் நடந்த சம்பாஷனை

மார்ச் மாதம் 28ஆம் திகதி 2011ஆம் ஆண்டு சுவாமி மருத்துவமனையில் சேர்ந்தார். மறுநாள் என் இல்லத்தில் காட்சி அளித்தபோது:

"என்ன நடந்துகொண்டிருக்கிறது சுவாமி?" என்று கேட்டேன். "அதெல்லாம் தமாஷ், இக் காட்சியே நிஜம்" என்று சொன்னார்.

"ஆம் நானும் அப்படித்தானே நம்பிக் கொண்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் மருத்துவ மனையிலிருந்து திரும்பி உங்கள் உடல்நிலை சீக்கிரமே குணமாகிவிடுமல்லவா?" என்று வினவினேன்.

"ஓ நீ கவலையடையாதே, உனக்கு நம்பிக்கையிருந்தால் எல்லாம் சரியாகி விடும். நானும் திரும்பிவிடுவேன்."

"உங்களிடம் நம்பிக்கை இருக்கவே செய்கிறது. சுவாமி! நீங்கள் கடவுளென்பதும் உங்களால் எதுவுமே செய்யமுடியுமென்பதும் எனக்குத் தெரியும்." ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, மருத்துவமனையிலிருந்து வெளிவந்த அவரது உடல்நிலையைப் பற்றிய குறிப்புகள் மோசமாகிக்கொண்டேயிருந்தன.

சம்பவங்களின் திடீர் திருப்பம் உலகம் முழுவதிலுமிருந்த பக்தர்களைக் கலக்கிக் கொண்டிருக்க, எங்கள் வீட்டில் மட்டும் அவர் நலமாகி விடுவார், மேலும் இந்தத் துயரம் ஒரு முடிவுக்கு வந்துவிடுமென்ற வகையில் புரிந்து கொண்டு மகிழ்ச்சியாக இருந்தோம்.

சரித்திர பூர்வமாக அந்நாளும் வந்தது. ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று (24.04.2011) தொலைக்காட்சி மூலம் சுவாமி தன் பூதவுடலை நீத்துவிட்டாரென்ற செய்தி பரவலானது. நான் அதிர்ந்து போனேன். இது உண்மையாயிருக்காது என்று தலையை உதறிக்கொண்டே சுவாமியின் (வழிபாட்டறை) அறைக்கு ஓடி அவர் பிரசன்னமாக வேண்டும் என்று பிரார்த்தித்தேன். பளிச்சென்று வெள்ளையாடை தரித்து அவர் உடனடியாகப் பிரசன்னமானார்.

"என்னதான் நடந்து கொண்டிருக்கிறது சுவாமி? நீங்கள் இறந்துவிட்டதாக அவர்கள் கூறுகிறார்களே"
"ஓ அதெல்லாம் உண்மையில்லை"
"ஆனால் அச் செய்தி தொலைக்காட்சி மூலம் பரவி விட்டதே!"

"எனக்கொன்றும் ஆகிவிடவில்லை. பார், நான் உந்தன் முன்னால்தானே இருக்கின்றேன்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை சுவாமி, அவர்கள் தீவிர சிகிச்சைகளை நிறுத்திவிட்டார்கள். மருத்துவ ரீதியாக நீங்கள் உயிருடன் இல்லையென உறுதி செய்துவிட்டார்களே!."

"நான் இறக்கவில்லை. எனது நகங்கள் நீலமாகவில்லை. தோல் நன்றாகத்தானே இருக்கிறது. நான் எங்கும் செல்லவில்லை."

எனக்கு ஒருவார்த்தைகூட புரியவில்லை. எதையும் புரிந்துகொள்ளும் நிலையிலுமில்லை. அவரிடம் மனமார்ந்து வேண்டினேன். "சுவாமி நீங்கள் சொல்வதை விளங்க முடியவில்லை!."

"நான் எங்கும் செல்லவில்லை. நான் இங்கேயே இருக்கின்றேன். உனக்கு நம்பிக்கை யிருந்தால் நான் திரும்பி வந்துவிடுவேன்."

"ஆம் சுவாமி, நீங்கள் திரும்பி வந்துவிடுவீர்கள் என்றும் தொலைக்காட்சியில் சொல்பவையெல்லாம் நிஜமில்லையென்றும் எனக்கு நம்பிக்கை உள்ளது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?"

"புட்டபர்த்திக்குச் சென்று அந்த தமாஷைப் பார்"
காரில், இதயம் துடிதுடிக்க புட்டபர்த்திக்குச் சென்றேன். நான் ஏதோ அற்புதம் நிகழுமென ஊகித்தேன்.

அங்கே பலரின் வாழ்க்கையைச் சுக்கு நூறாக்கியிருந்த அந்த காலைச் செய்தியிலிருந்து சிறிது நிவர்த்தி கிடைக்கு மென்ற எதிர்பார்ப்பில்; சுவாமி என்னிடம் வருகை புரிவதும், போவதும் தெரிந்த என் நண்பர்கள் பலர் என்னை தொலைபேசியில் கூப்பிட்ட வண்ணம் இருந்தனர்.

என்ன சொன்னார்? என்ன சொன்னார்?!!!

"நம்பிக்கையைத் தக்கவைத்துக் கொள்ளுங்கள். சுவாமி திரும்பி விடுவார்" இதைத்தான் சுவாமி சொன்னார்.

ஏப்ரல் 26 அன்று திரும்பி வருவேன் என்று கூறி, "எனது உடல் மிகுந்து குளிர்ந்திருக்கும். நான் உஷ்ணமாக உணர்வதற்கு கம்பளங்களையும் உலர்ந்த ஆடைகளையும் சூடான பாலும் வைக்க வேண்டும். எனது தலைமாட்டில் நீ ஒருபுறம், தம்பி ஹனுமாந்த மறுபுறம் அமர்ந்து அசையாமல் என்னைக் கவனித்தவாறு இருக்க வேண்டும். நாளை உன்னைச் சந்திக்கிறேன்." அவர் காத்திருந்தும் வரவில்லை. நாங்கள் எழும்பிப் போக வேண்டிய நேரம் வந்துவிட்டது. சுவாமி என்னை ஏமாற்றி விட்டாரென்று நான் மிகுந்த கவலையுடன் அறைக்குச் சென்று கிடந்துவிட்டேன்.

காலை 3 மணியளவில் சுவாமி தோன்றினார்!!!

என்ன கோபமா? என வினவினார்.

நான் பலருக்கு சுவாமி திரும்புவார் என்று சொல்லி அவமானப்பட்டுவிட்டேன்.

"இல்லை, அது பொய்யல்ல. நான் வரவே செய்தேன், இன்னொருநாள் அன்று நடந்ததைக் கூறுவேன்."

மறுநாள் காலை மந்திருக்குச் சென்ற போது அவரைப் புதைப்பதற்கு குழியும் தோண்டப்பட்டு இறுதிச் சடங்குகளுக்குரிய எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன. நான் சக்தியிழந்து ஒரு இடத்தில் அமர்ந்தேன். தாய் தன் வாக்கைக் காப்பாற்றத் தவறியதால் காயப்பட்ட சிறு குழந்தையைப் போல உணர்ந்தேன். என் தலையில் யாரோ தட்டுவதைப்போல உணர்ந்தேன். சுவாமி மஞ்சள் நிறப் பட்டு அங்கியில் தோன்றினார்.

ஏன் அழுகிறாய்? எனக் கேட்டார்.

"சுவாமி பாருங்கள். உங்கள் உடலை குழியில் புதைக்கப்போகிறார்கள். அதன்பின் திரும்பி வரவே இயலாது" என்று கதறினேன். இரவு 9.00 மணிக்கு ஏதோ ஒன்று இழுத்து என்னை சுவாமியின் சமாதி அருகில் விட்டது. பௌதீக உடலமைப்பில் சுவாமி தோன்றினார்.

"அருகில் வா", "இன்னும் அருகில் வா" என்றார்.

"கோபமா? என்னிடம் கோபப்படாதே. உன்னுயிருள்ளவரை உன்னுடன் இருப்பேன். என வாக்குறுதி அளிக்கிறேன். உனக்கு எனது நினைவு வரும் பொழுதெல்லாம் நான் உன்னிடம் வந்து பேசுவேன்.

"நான் உங்களை நேசிக்கிறேன் சுவாமி" என்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாட்கள் கழித்து ஏப்ரல் 26ஆம் திகதி என்ன நடந்தது என விவரித்தார். “காலை 5 மணிக்கு உடலில் மீண்டும் புகுந்தேன். தான் உலகம் முழுவதும் சென்று மானசீக தரிசனம் கொடுத்து வந்துள்ளேன். இது முடிவல்ல, தான் இறுதி வரை இருப்பேன் என்று உறுதியளித்து வந்தார்.” 26ஆம் திகதி காலை அவர் இறுதியாக பஞ்ச பிராணன்களையும் விடுத்தார். கடைசிப் பிராணன் அதிகாலை 5. 12 மணியளவில் தலையை விட்டுப் பிரிந்தது. **இதன்போது பிரம்மாண்டமான சக்தி விடுவிக்கப்பட்டது.** அவருடைய வருங்காலப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமான பலத்தை பெறுமாறு நாம் அனைவரும் அந்த சக்தியை ஈர்த்துக்கொள்ளவேண்டும் என்பது அவரது நோக்கம்.

**நான் படித்துக் கொண்டதும் எனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளும்:**

- அவர் சொல்லுக்குக் கீழ்ப்படியும் குணாதிசயம் பரீட்சிக்கப்பட்டது.
- இதற்காக எவ்வளவு அவமானப்பட்டாலும் முழு நம்பிக்கை தளராது இருக்கவேண்டும்.
- சுவாமி சொல்வது போலவே நிகழ்ந்தால் என்மீது நம்பிக்கை இருப்பது மிகப் பெரிதல்ல. நான் சொல்லியபடி நடக்காவிடினும் என்னை நம்பினால் நீ சிறந்த பக்தனாவாய்.
- ஒரு நினைவளவு தூரத்தில்தான் இருக்கிறார்.
- 26ஆம் திகதி சக்தி உடலிலிருந்து பிரிந்ததால் 9ஆவது நாள் மே மாதம் 4ஆம் திகதியன்று 250 பேருக்கு உணவளிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்.
- நாம் யாரையும் நேசித்தாலும் அவருள் இருக்கும் சுவாமியையே நேசிக்கும் மனோபாவம் இருக்க வேண்டும்.
- இனிமேல் தேகரூபனாக அவரை வணங்காமல் இப் பிரபஞ்சம் முழுதும் நிறைந்த விஸ்வரூபனாக வணங்க வேண்டும்.
- தொலைபேசியில் நண்பர்கள் சகாக்களின் இலக்கங்களை நீக்கிவிடவேண்டும்.
- அவருடைய அனுமதியில்லாமல் யாரையும் கூப்பிடவோ சந்திக்கவோ மாட்டேன்.
- உணவகங்களில் சாப்பிட வேண்டாம்.
- ஆனந்தம் என்பது மனதையும் புலன்களையும் கடந்த நிலையிலேயே உள்ளது என்று கர்ஜித்தார்.


----

**சுவாமி! நீங்கள் ஏன் குறித்த காலத்திற்கு முன் தேகத்தை விட்டுவிட்டீர்கள்? என்று ஒருமுறை கேட்டேன்.**

“அது என்விருப்பம். அதன்படி நான் வந்தேன். அவ்விருப்பப்படியே நான் விட்டுச் சென்றேன்.” என்று கூறினார். மேலாக,

“பலவிதமான கடமைகளை என் தேகம் ஏற்றுக்கொண்டிருந்தது. அதிலொன்று இவ்வுலகையும் அதில் வசிப்போரையும் காத்தருள்வது. இப் பிரபஞ்சம் முழுவதும் கர்மாவினால் தப்ப இயலாது. ஆனால் எப்போதாவது கொடூரமான நோயிலிருந்தோ தாங்க முடியாத வலியிலிருந்தோ விடுவிக்க என் பக்தர்கள் வேண்டினால் எனது சங்கல்ப்பப்படி அவர்களது கர்மாவை என் உடலுக்கு மாற்றிக் கொள்வேன். பிரேமையின் காரணமாக மற்றவர்களின் செயல்களின் பின்விளைவுகளை ஏற்று வருந்தி இறுதியில் உடல் சீர்கேட்டையும் மறைவையும் சீக்கிரமே சந்திக்க நேர்ந்தது. இந்த அவதிகளை அனுபவிப்பது எனக்குச் சுலபமாக இருந்தது. ஏனென்றால் நான் உடலல்ல என்ற உண்மையை முதலிலிருந்தே அறிவேன். அவ்வுடலால் பொறுக்க முடியாதென்ற நிலையை அடைந்தால் அப்பொழுது நான் எனது தத்துவத்தில் என் மனதினை உள்ளிழுத்துக் கொண்டு அந்த ஆனந்தத்தில் என் உடல் வலியை மறந்து இடரைக் கடந்து விடுவேன். ஆகவே ஒருபுறம் நான் துன்பப்பட்டேன் என்றாலும் மறுபுறம் எப்போதும் நான் துன்பப்படவேயில்லை.” என்று விளக்கினார்.


நன்றி: தெய்வீகக் கதை
மதுசுதன் நாயுடு (2016)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய் உணர்தல்



மெய் உணர்தல் = உண்மையை, சத்தியத்தை அறிதல் : பகுத்தறிதல்

உண்மையான பக்தி வளர்வதற்கு 5D தேவை என்று பகவான் கூறுகிறார். அதில் ஒன்று Discrimination, அதாவது பகுத்தறிதல், மற்றவை Dedication (அர்ப்பணம்), Devotion (பக்தி), Discipline (ஒழுக்கம்), Determination (சங்கற்பம்) ஆகும்.


**பகுத்தறிதல் பற்றி பகவான் சாயி :**

எல்லைகள் அறிந்து நீ வாழவேண்டும். அது மட்டும் அல்ல, பகுத்தறியும் குணம் உனக்கு வேண்டும். எது நல்லது, தீயது, எது சரி, தவறு என்று நாம் தீர்மானிக்கவேண்டும். பகுத்தறிதல் வல்லமை மிருகங்களுக்கு இல்லை. இதுதான் மிருகங்களுக்கும் நமக்கும் உள்ள வேற்றுமை. பகுத்தறிய முடியாவிடில் நீ இரண்டு கால்களையுடைய மிருகம்தான். வள்ளுவர் **"மெய்ப்பொருள் காண்பது அறிவு"** என்று இரண்டு குறள்களில் கூறுகின்றார்.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.
(355)
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு
(423)

எப்பொருள், எந்தத் தன்மையைக் கொண்டிருந் தாலும், யார் யார் வாய்மூலம் கேட்டிருப்பினும், அதனை ஆராய்ந்து அதன் உண்மையான இயல்பை, தன்மையை, அர்த்தத்தைக் கண்டுகொள்வதுதான் அறிவு என்று கூறியிருக்கிறார் வள்ளுவர். அந்த அறிவு நமக்கு மிகவும் அவசியம். அல்லாவிடில் நாம் பொய்யான அர்த்தத்தைக் கற்பனை செய்து தவறான செயல்களில் ஈடுபடக்கூடும்.

இன்னும் இரண்டு குறள்கள் இதனை விளக்குகின்றன. அதற்குமுன் கீழே உள்ள படத்தைக் கவனிக்கவும்.




ஐம்புலன்களாகிய சுவை, பார்வை, தொடுகை (ஊறு), ஓசை, நாற்றம் - என்ற உணர்வுகள் எமது அறி மனத்தை (Conscious mind) வந்து அடைகின்றன. இவற்றை உள்வாங்கும் அடி மனத்தின் நிலைக்கு ஏற்ப நாம் செயற்படுகிறோம். அந்தச் செயற்பாட்டின் சிறப்பிலேயே உலகுடன் ஒருவரின் தொடர்பு தங்கியுள்ளது.

குறள் :

சுவைஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு (27)

ஒரு நாய், உணவு இருக்கும் பாத்திரம் ஒன்றைப் பார்த்ததும் அல்லது உணவை நுகர்ந்ததும் அதில் வாய் வைக்கும். ஆனால், ஒரு மனிதன் அப்படியா? அவன் இது நல்ல உணவா? இது எனது உணவா? இது தகுந்த இடமா? சரியான நேரமா என்று எல்லாம் ஆராய்ந்த பின்பே கை வைப்பான்.

இப்படியாக அறிமனம் சிந்திப்பது தான் பகுத்தறிதல் எனப்படும். மெய் உணர்தலும் அதுவே. அத்தகைய மெய் உணர்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதவர்க்கு ஐம்புலன்களின் உணர்ச்சிகள் போதுமான அளவு இருப்பினும் அவற்றால் பயன் இல்லை. உணர்வுகள் மனதிற்கு வந்ததும் மிருகங்கள் போல செயற்படுவார்கள்.
குறள் :
ஐஉணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்உணர்வு இல்லா தவர்க்கு (354)

பகவான் சாயி ஐம்புலன்களை அடக்கி ஆள வேண்டும் என்று பல உரைகளில் கூறியுள்ளார். அவரது அருள்வாக்குகள் பல இதனையே வலியுறுத்துகின்றன. சுருக்கமாக, "மெய் இன்பத்தை நாடுபவர்கள் புலன்களினால் வரும் உணர்வு இன்பங்கள் வழியே அலையப்படாது" என்று கூறுகிறார்.

ஆகவே, ஐம்புலன்களினால் கிடைத்த செய்தியைச் சீர்தூக்கிச் செயற்படவேண்டும். நல்ல செய்திகளையும் அனுபவங்களையும் அறி மனத்திலிருந்து அடி அறி மனத்திற்கு (Sub Conscious Mind) அனுப்பிச் சேகரித்து வைக்கலாம். கெட்டவற்றைக் கண்டிப்பாக அடி அறி மனத்திற்கு அனுப்பப்படாது : மறந்து போக வேண்டும்.

இனி, ஆத்ம சாதனை செய்பவர்கள், அறி மனம் பெற்றுக்கொண்ட உணர்வுகள் மூலம் அதி உயர் உண்மைகளையும் அறிய முடியும். பல அரிய சாதனைகளைச் சாதிக்க முடியும். அந்த நிலையில் அவர்கள் தமது உயர் அறி மனத்தை (Super Conscious Mind) உபயோகிப்பர். (இது பற்றி மேலும் எட்டாம் அத்தியாயத்தில் குறிப்பிடுவோம்.)

ஒரு பற்றற்ற நிலையில் இத்தகைய உயர் ஞானத்தை இலகுவில் அடையமுடியும். அதனாலேதான் வள்ளுவர் பெருமான் மெய்யுணர்தலை துறவு என்ற அதிகாரத்தின் பின் தனது நூலில் வைத்தார் என்று உரை ஆசிரியர்கள் கூறுவர்.

ஒரு குறள், மெய்யுணர்தலுக்கும் இன்ப நிலைக்கும் (சாந்தி நிலை) உள்ள தொடர்பைக் காட்டுகின்றது. அதாவது :
இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு (352)

மருள் (மயக்கம்) நீங்கி மாசு இல்லாத காட்சி (அறிவு) உள்ளவருக்கு, இருளான அறிவின்மையும் துன்பமும் நீங்கிய இன்ப நிலை ஏற்படும்.

இத்தகைய இன்ப நிலையை சாயியின் மேம்பாடுகளில் சாந்தி என்று கொள்கிறோம்.

நான்காம் அத்தியாயத்தில் 75ஆம் குறளை வைத்து இதனைப் பார்த்தோம்.
ஆகவே,

| | |
|---|---|
| மெய்யுணர்வு | இன்பம் |
| (சத்தியம்) | (சாந்தி) |

நன்றி :
சாயியின் குரலும் வள்ளுவர் குறளும் (2000)
அமரர் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்
(நந்தி)

## சுதந்திரம் என்றால்?



உண்மையான சுதந்திரம் எது? எதை வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் செய்வதா சுதந்திரம்?

தன்னை அறிவது தான் சுதந்திரம்.

புலனடக்கம் சுதந்திரம்மற்றவர்களின் சுதந்திரத்தை தடைசெய்யாதிருப்பது சுதந்திரம்.

தனிமனித சுதந்திரம் பொதுச்சட்டத்தை கவனித்து நடப்பது சுதந்திரம்.

சுதந்திரம் என்று சொல்லி நடுத்தெருவில் அமர்வது பொதுச்சட்டத்தை மீறுவதாகும். இது சுதந்திரமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருவம் - உருவம்



அருவமும் உருவமும் ஆகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய!

“பிறவா யாக்கைப் பெரியோன்” என்று சிலம்பு உரைக்கும் ஈசனே, ஆறுமுகச் செவ்வேள் முருகனாக உதித்தனனாம். அருணகிரியார் முருகனை “பெம்மான் முருகன் பிறவான் இறவான்” என்பார். காளிதாசன் “குமார சம்பவம்” எனப் பெயரிட்டதுபோல, அந்த நிகழ்வை விளக்கும் காண்டத்தைக் கந்தபுராணத்தில் “உற்பத்திக் காண்டம்” எனப் பெயரிட்டுள்ளது போல:- உலகம் உய்வதற்கென ஈசனே குழந்தை வடிவம் கொண்டு தோன்றிய அரும்பெரும் நிகழ்வு அ.்.து.

முருகன், தனிவேல் முனி, நம் குரு என்று அருள்கொண்டு அறியார் அறியும் தாமோ உரு அன்று, உளது அன்று, இலது அன்று, இருள் அன்று, ஒளி அன்று என நின்றதுவே!

முருகனின் அருளைக் கொண்டு மட்டுமே அவனை அறியமுடியும்.

கந்தர் அனுபூதி 13ஆம் பாடல்
அருணகிரிநாதர்

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே.
- 51ஆம் பாடல்

அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
- திருவாசகம் - 193,194ஆம் வரிகள்

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
71 74ஆம் வரிகள்
சிவபுராணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் அறிவற்றவர்கள்

- குரதாசன்

**முல்லா நஸ்ருதீனை** விசாரிப்பதற்காக நீதிமன்றில் தத்துவவாதிகள், தர்க்கவாதிகள் மற்றும் சட்டநிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். இது ஒரு தீவிரமான வழக்கு. ஏனென்றால் அவர் கிராமம் கிராமமாக தான் சொல்வதை ஒப்புக்கொண்டார்.

அவர் சொல்வது, "இன்றைய தத்துவ வாதிகள், மதகுருமார் என்று சொல்லப்படுபவர்கள் எல்லோரும் அறிவற்றவர்கள், தெளிவற்றவர்கள், குழப்பமானவர்கள்".

அவ்விதம் சொல்லி மாநிலத்தின் மக்களிடம் குழப்பத்தை உண்டாக்கியதாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது.

"முல்லா, நீங்கள் முதலில் உங்கள் கருத்தைக் கூறலாம்" என்றார் அரசர்.

"அரசே, காகிதத்தையும் பேனாவையும் கொண்டு வரச்சொல்லுங்கள்" என்றார் முல்லா. காகிதம் மற்றும் பேனாக்கள் கொண்டுவரப்பட்டன.

"முதல் ஏழு அறிவாளிகள் ஒவ்வொருவருக்கும் காகிதத்தையும் பேனாக்களையும் கொடுங்கள்" என்றார் முல்லா.
அவ்விதமே விநியோகிக்கப்பட்டன.

"ஐயா அறிவாளிகளே, இந்தக் கேள்விக்கான பதிலைத் தனித்தனியாக எழுதுங்கள். **'ரொட்டி என்றால் என்ன?' "**

அவ்விதம் எழுதி முடிக்கப்பட்ட தாள்கள் படிப்பதற்காக மன்னரிடம் ஒப்படைக்கப்பட்டன.

முதலாமவர் எழுதியிருந்தார், "ரொட்டி ஓர் உணவு."

இரண்டாமவர், "இது மாவு மற்றும் தண்ணீர்."

மூன்றாமவர், "கடவுளின் பரிசு."

நான்காமவர், "நீங்கள் 'ரொட்டி' என்பதை எப்படிக் குறிப்பிடுகிறீர்களோ, அதன்படி மாறக்கூடியது."

ஆறாமவர், "ஒரு சத்தான பொருள்."

ஏழாமவர், "உண்மையில் யாருக்கும் தெரியாது."

"ரொட்டி என்றால் என்ன? என்பதையே அவர்கள் இப்படித் தீர்மானிக்கும்போது, மற்ற விஷயங்களையும் அவர்கள் இப்படித்தானே தீர்மானிக்கமுடியும்?" என்று நஸ்ருதீன் கேட்டுவிட்டு, "உதாரணமாக நான் செய்தது சரியா தவறா என்பதை உறுதிப்படுத்த இது போன்ற நபர்களிடம் மதிப்பீடு செய்ய நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா?"
"இவர்கள் ஒவ்வொரு நாளும் சாப்பிடும் ரொட்டியைப் பற்றியே **அவர்களால் ஒத்த கருத்தைக் கொண்டிருக்க முடியவில்லை.** அப்படியிருக்க கடவுளைப் பற்றி இவர்களால் எப்படி ஒருமித்த கருத்துக் கொண்டிருக்க முடியும்? இந்த நிலையில் நான் ஒரு குழப்பவாதி என்பதில் மட்டுமே ஒருமனதாக இருக்கிறார்கள்?" என்று சொல்லி முடித்தார். இறுதியாக முல்லா வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

நன்றி - ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்
மாத இதழ், ஜனவரி 2024
பக்கம் 33

### இந்திய வரலாற்றில்


பீற்றர் றொஸ் (Peter Rous) என்பவர் 1812ஆம் ஆண்டு மதுரைப் பிரதேச கலெக்டர் (Collector) ஆக நியமிக்கப்பட்டார். இப் பதவியில் இறக்கும்வரை (1828) இருந்தார். அக்கால முறைப்படி பிரதேச கலெக்டரே அங்குள்ள ஆலயங்களுக்கும் பொறுப்பாக இருந்தார். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கும் இவரே பொறுப்பாயிருந்தார். இவர்தான் விழாக்களின்போது முதன்மையில் நிற்பார். இவர் இந்துக்களையும் கோவில்களையும் மதித்தார். மீனாட்சி அம்மனை குதிரைமீது போகும்போது ஒருமுறை வலம் வந்து வணங்கித்தான் காரியாலயத்திற்குப் போவார். இதனால் அவரை பீற்றர் பாண்டியன் என்று மக்கள் அழைத்தார்கள்.
ஒரு இரவு காற் சங்கிலிச் சத்தத்தினால் எழும்பி வீட்டிற்கு வெளியே பார்த்தபோது ஒரு சிறுமி நடமாடுவதைக் கண்டார். அச் சிறுமி கோவிலை நோக்கிப் போக இவரும் பின்தொடர்ந்தார். சிறிது நேரத்தில் பெரிய மின்னல் விழுந்து வீடு சேதமாகியது. பீற்றர் சிறுமியைப் பின்தொடர சிறுமி கோவிலுக்குள் சென்று கருவறையில் மறைந்துவிட்டார். மீனாட்சி அம்மன்தான் தன்மைப் பாதுகாத்துள்ளார் என உணர்ந்தார். அம்மன் சிறுமியாக இரு முறைதான் காட்சியளித்துள்ளாரென வரலாறு கூறியுள்ளது. அம்மனுக்கு நன்றி செலுத்துமுகமாக ஒரு சோடி காற்சங்கிலியைத் தானமாகக் கொடுத்தார். அதில் மிகவும் வேலைப்பாடுகளுடனும் விலையுயர்ந்த மாணிக்கக் கற்களும் பதிந்திருந்தன. காற்சங்கிலி இப்போதும் கோவிலில் இருக்கிறது. இவர் 1828ஆம் ஆண்டு காலமானார்.
பக்திக்கு பதவி, சாதி, சமயம் தடைகளல்ல.

நன்றி - கூக்கிள்

(படம் போடவேண்டும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. நவாவ் அல் ஷிபிலிஸ் (Dr. Nawwaf Al Shibliss)

சிரியா (Syria) நாட்டிலுள்ள சாயி நிலையம் மற்றும் சாயி நிறுவனத்தின் முக்கிய நிர்வாகியாகப் பணியாற்றுகிறார். இவரை திரு. ரெட் ஹென்றி (Ted Henry) என்பவர் சோல்ஜேர்ன் (Souljourn) க்காக இந்தியாவிலும் கல்போர்னியா (California-USA) இலும் நடந்த நேர்காணலிற்குப் பின்பு 24.07.2024 அன்று வெளியிடப்பட்டது.

சிரியா நாட்டில் தீவிரவாதிகளுக்கும் தேசிய படைக்குமிடையில் தீவிரமான போர் நிகழ்ந்தகாலம். சிறு குழுவினர் தாங்களாகவே ஒவ்வொரு கல்லாகச் சேர்த்து அங்குள்ள சாயி நிலையத்தைக் கட்டினார்கள். இத் தொண்டு 30 வருடங்கள் நடந்தது. இவர்கள் சிரியாவிலும் சுற்றியுள்ள நாடுகளிலிருந்து ஆன்மீக நாட்டம் கொண்டவர்கள், தமது சாதனைகளை அனபுத் தூதர்களின் அமைப்பு (Messangers of Love Association) என்ற பெயரில் இயங்குகிறார்கள். பகவானின் பிரபஞ்ச செயற் பாடுகளும் போதனைகளும் தன்னலமற்ற சேவையும் பலரைக் கவர்ந்தது.

இவரின் மாமனார் சிறுகுழுவுடன் 1975இல் பிரசாந்தி நிலையத்தில் சுவாமியின் முதல் தரிசனத்தைப் பெற்றார். மாமனார் தமது வீட்டிலேயே சிறியளவில் நிலையத்தை உரு வாக்கினார். மெல்ல மெல்ல வளரத் தொடங்கியது. நிலையம் இருக்கும் பகுதிக்குப் பெயர் டார் அல் சலாம் (dar Al Salam) வைத்தியர் நவாஸ் 13 தடவைகள் பிரசாந்தி நிலையத்திற்குச் சென்றுள்ளார். ஒவ்வொரு முறையும் 3 - 6 மாதங்களுக்கு அங்கேயே இருப்பார். சாதனைகள் புரிவதும் அங்கே வைத்தியர் அக்ரவாலிடம் அதிர்வலை சிகிச்சை (Vibrio......) முறையைக் கற்றுக் கொண்டார். சென்றவருடம் அங்குள்ள பற்சிகிச்சை நிலையத்தில் பற்சிகிச்சை வைத்தியராகப் பணிபுரிந்தார். அங்கே சேவை சந்தர்ப்பத்தை ஒரு மகா சமுத்திரமாக அனுபவித்தேன். சுவாமி எப்போதும் என்னுடன் இருக்கின்றார் என்ற அனுபவத்தில் வாழ்கின்றேன்.

பிரசாந்தி நிலையத்திலுள்ள வராண்டா வில் இருக்க அனுமதிக்கப்பட்டேன். அங்கே சுவாமியுடன் சம்பாஷிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும். இவர் 1996 - 2002 வரை சவுதி அரேபியாவில் (Saudi Arabia) வேலை செய்தார். மகேஸ் யோகி, பரமகம்ச யோகானந்தா, சுவி மகான்களுடன் 2003 வரை ஆன்மீக மகான்களுடன் தொடர்பு கொண்டேன். 2003ஆம் ஆண்டு சுவாமியின் தரிசனம் கிடைத்தது. ஒருமுறை தனியாகவே வராண்டாவில் இருந்தேன். நான் மொழி பெயர்த்த பிரேம வாஹினியை பக்கம் பக்கமாகக் காட்டினேன். அப்போது சுவாமியின் தலைமுடி எனது முகத்தை உரசியது. அப்போது பரவசமானேன். மனம் செயலற்றது. சுவாமி தனது சக்தியை என்மீது செலுத்தினார். நான் குடும்பத்துடன் சுவீடன் நாட்டிற்குச் செல்ல ஆயத்தமானேன். போர்ச்சூழல் எனது தேசத்தில் தீவிரமடைந்தது. சுவாமி கனவில் வந்து என்னை சிரிய நாட்டிற்குத் திரும்பிப் போகச் சொன்னார். நானும் மனைவியும் ஏற்றுக் கொண்டு திரும்பினோம். சுவாமி அங்கு யாகம் செய்யச் சொன்னார். சுவாமியின் பாதுகாப்பு எப்போதும் இருக்கிறது.

ஒருமுறை தீவிரவாதிகள் நிலையத் தினுள் புகுந்து உருவங்களை வழிபடும் குற்றத் திற்காக எம்மை நோக்கித் துப்பாக்கியை நீட்டினார்கள். நான் ஒரு அச்சமுமின்றி அவர்களின் பாதத்தை நோக்கி அன்பு சக்தியைச் செலுத்தினேன். அவர்களின் மனம் மாறி வெளியேறினார்கள். இப்போது நிலையத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் 50,000 பக்தர்கள் உள்ளார்கள். நாம் தீவிரமாக பஜனை, சேவை, சத்சங்கம் ஆகியவற்றில் ஈடுபடுகிறோம்.

முதலில் மேர்வெற் (Howard Murphet) எழுதிய "அற்புதங்கள் புரியும் மாமனிதன்" Man of Miracles என்ற புத்தகத்தை அரேபிய மொழியில் பிரசுரித்தோம். "உள்ளே பார்க்கும் தத்துவம்", புத்தகம் இரண்டு நாட்களில் எழுதி முடிக்கப்பட்டது.

இன்னொரு புத்தகம் "பிரேம வாஹினி" 2008இல் எழுதிமுடிக்கப்பட்டது. அதன் வெளியீட்டைப் பிற்போடுமாறு சுவாமி கூறினார். நிலையம் இருந்த இடத்திற்கு அண்மையில் பூகம்பம் ஏற்பட்டு பெரியளவில் சேதம் ஏற்பட்டது. எமது அங்கத்தவர்கள் சேவைப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு மக்களின் ஆதரவைப் பெற்றார்கள். நான் எப்போதும் சுவாமியிடம் ஆத்ம தரிசனத்தையே வேண்டுகிறேன். எமது அங்கத்தவர்களில் பயமென்பதில்லை. நாம் அடிக்கடி சாயிராம் சொல்லிக்கொள்வோம். நாம் சுவாமியை உள்ளே அனுபவித்தால் அதுவே பொற்காலம் உதித்ததற்கு அடையாளம். நாம் வீட்டிற்கு வீடு போயே சேவை செய்தோம். போர்ச்சூழல் நிலநடுக்கம் ஆகியவை எம்மிலுள்ள பயத்தை நீக்கி ஆன்மாவில் நிலைக்கச் செய்தது.

ஜெய் சாயிராம்

நன்றி: Saljourn Ted henry



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது வாழ்வில் சுந்தரமான தொழில் கிடைத்தது எப்படி ?



**திரு. சஞ்சீவன் மகேஸ்வரன்**

கனவுத் தொழில் கிடைத்தது எப்படி?

(இவர் சத்ய சாயி நிறுவனத்தில் 1996ஆம் ஆண்டில் சேர்ந்து தற்போதும் செயலாற்றி வருகிறார். ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் சினிமா தொலைக்காட்சி நுட்பத்தில் பட்டம் பெற்று தற்போது சத்ய சாயி சர்வதேச நிறுவனத்தின் மின்னூடக குழுவில் அங்கம் வகிக்கிறார். பகவானின் முன்னிலையில் பல கலாச்சார நிகழ்வுகளில் பங்குபற்றியுள்ளார்.)

1996ஆம் ஆண்டு எனது உற்றார் திருமணக் கூட்டத்துடன் பிருந்தாவனம் சென்றேன். அங்கேதான் சுவாமியின் தரிசனம் முதலில் கிடைத்தது. எனக்கு அன்றே பாத நமஸ்காரம் தந்தார். அந்நாள் முதல் சுவாமி மீது அளவிலா கவர்ச்சியும் பஜனையில் ஆர்வமும் ஏற்பட்டது. கொழும்பு திரும்பியதும் கிடைத்த நேர மெல்லாம் சாயி நிலைய நிகழ்வுகளில் பங்கு கொண்டேன். எனக்கு சக நண்பர்களுடன் சமூக உறவுகள் கொண்டாட நேரமிருக்க வில்லை.

எல்லோரும் என்னை மின்நுட்பவியல் எஞ்சினியராக வரவேண்டுமென்று சொல்ல நானோ மின் ஊடகவியலாளராக வரவேண்டு மென்றே தீர்மானித்தேன். என்ன செய்வதென்று கலங்கிய போது சுவாமி கனவில் தோன்றி புன்னகையுடன் பாத சேவை செய்ய அனுமதித்து எனது விருப்பத்தை அறிவித்ததும் "தமிழில் நீ தெரிந்தெடுத்த அறிவியல் நல்லது. நீ ஆஸ்திரேலியா சென்று 2 வருடங்கள் படித்து பட்டம் பெறுவாய். எனது ஆசீர்வாதம்" என்று சொல்லி மறைந்தார்.

காலையில் மிக ஆனந்தத்துடன் எழும்பி எனது கலக்கமும் நீங்கிவிட்டது. ஆஸ்திரேலியா விலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி கோரினேன். அவர்கள் ஏனோ நான் ஆஸ்திரேலி யாவில் அகதியாகத் தங்கிவிடுவேனோ என்று நினைத்து அனுமதி தரவில்லை. எனக்கோ மிகவும் கவலை. சுவாமியிடம் முறையிட்டேன். ஆஸ்திரேலியாவுக்கு போவேன் என்றீர்களே அது நடக்குமா எனத் தெரியவில்லை.

நான் ஸ்ரீ லங்காவில் ஓர் உணவகத்தில் வேலை செய்யத் தொடங்கினேன். 2007ஆம் ஆண்டு பிரசாந்தி நிலையத்தில் நடந்த உலக இளைஞர் மகாநாட்டில் எனது திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்தது. எனக்கு மிகவும் திருப்தி.

2009 இல் விவாகம் செய்தேன். எனது மனைவியாரும் ஓர் சாயி பக்தை. சுவாமியின் வேலைக்கே முன்னுரிமை கொடுத்தார். இது எனது கடவுளை நோக்கிய பயணத்திற்குக் கிடைத்த பெரிய ஆசீர்வாதம் என்பதில் ஐயமில்லை.

ஒரு பிரபல்ய சினிமாப் பணிப்பாளருக்கு விடியோ தயாரிப்பாளராகப் பணிபுரிந்தேன். 2010ஆம் ஆண்டு இளைஞர் அணியின் நாடகத்தில் அங்குலிமாலாவின் தாயாக நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் புட்டபர்த்திக்கும் போவதற்கு விடுமுறை கேட்டபோது அந்தப் பணிப்பாளர் தானும் வருவதாகக் கூறி விமானச் சீட்டு இரண்டை வாங்கித் தயாரானார். அவரும் சுவாமியைக் கண்டவுடன் உயர் மாற்றம் அடைந்தார். சுவாமியின் பார்வைக்காக தொழிலதிபர்கள் எல்லாவற்றையும் மறந்து ஆனந்தமடைவார்கள்....

புட்டபர்த்தியில் சுவாமியின் ரேடியோசாய் நிறுவனத்தில் வேலை செய்யும் பழைய மாணவர்களைப் போல் நானும் சேவை செய்ய வேண்டுமெனப் பிரார்த்தித்தேன். 2010இல் பகவானின் 85ஆவது பிறந்ததின விழாவின் போது 10 நாட்கள் சேவை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது. 23ஆம் திகதி நவம்பர் அன்று எனக்கு காய்ச்சல் வந்துவிட்டது. சக வீடியோ மாணவர்கள் என்னை வித்தியாகிரி மைதான மேடையில் சேர்த்தார்கள். விழாவின் போது விடியோக்களை நாம் பார்த்து உடனுக்குடன் ஊடகவியலாளருக்கு கொடுக்கும் பொறுப்பு கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி மேடைக்கு வந்ததும் நான் சுவாமியின் அருகே மேடையில் நிற்கின்றேன் என்ற உணர்வு வந்தது. சுவாமி என்னைப் பார்த்து புன்னகை புரிந்தார். "நான் ஊடகவேலை நல்ல திறமான தொழில். ஏனென்றால் அது உன்னை என் அருகில் கொண்டுவரும்" என்று சொன்னது போல் எனக்கு இருந்தது. பௌதீக நிலையில் நிகழ்ந்த கடைசி பிறந்ததின விழாவில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது சுவாமியின் ஆசீர்வாதமேயாகும்.

கடவுளுக்கே எப்போது எதை என்னமாதிரித் தரவேண்டுமென்று தெரியும். டிசெம்பர் 2010ஆம் ஆண்டு என் மனைவிக்கு "திறன் வாய்ந்தவர்கள்" என்ற பிரிவின் கீழ் ஆஸ்திரேலியாவிற்கு இடம்பெயர விசா கிடைத்தது. அங்குள்ள ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து அனுமதி பெற நேர்காணலுக்கு அழைப்பு வந்தது. மீடியாப் பிரிவின் தலைவர் எனது கல்வித் தகைமை களைக் கேட்டபோது நான் ஸ்ரீலங்காவில் சத்ய சாயி சர்வதேச நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் புற்றுநோய் விடுதிச்சாலையின் விடியோ படத்தை சமர்ப்பித்தேன். அறிவியல்துறைத் தலைவர் திருப்தியடைந்து என்னுடைய தீவிர ஆர்வத்தை உணர்ந்து இரண்டு வருடப் படிப்பை கடின உழைப்பினாலும் தனது புத்திமதியைக் கேட்டுச் செயற்படுவதாலும் ஒரு வருடத்தில் முடிக்கலாம் என்று கூறினார். எனக்கு இனிய இசையாகவே இருந்தது.

என்னை ஒரு கம்பனியிலேயே வேலைத் திறனைப் பழக ஒழுங்கு செய்தார்கள். எனக்கு வாகனம் ஒன்று தந்துதவினார்கள். இதுவல்லவோ சுவாமியின் ஆசீர்வாதமென வாழ்ந்தேன்.

2014இல் இடி வீழ்ந்தது. சுவாமி கனவில் வந்து ஸ்ரீலங்காவிற்கு திரும்பும்படி சொன்னார். உற்றார், உறவினர் திரும்பவேண்டாம் என்றார்கள். நானும் மனைவியும் திரும்பி வருவதற்கு ஆயத்தமானோம். ஆனால் துரிதமாகச் செயற்படவில்லை. மார்ச் மாதம் 2017இல் சுவாமி கனவில் தோன்றி ஆணித்தரமாக ஸ்ரீலங்காவிற்குத் திரும்பும்படி பணித்தார். நாம் உடனே ஆயத்தமாகி திரும்பினோம். பிறந்த தேசம் திரும்பியதும் வேலை இல்லை, வீடு இல்லை. மிகவும் கஷ்டமாக இருந்தோம். வசதியிலிருந்து வசதியின்மைக்குத் தள்ளப்பட்டோம். இத் துன்பம் 9 மாதங்கள் நீடித்தன.

நான் சுவாமியின் படத்தைக் கையிலெடுத்து, "சுவாமி நீங்கள் சொன்னபடியே நான் நடந்துள்ளேன். ஏன் எம்மை இவ்வளவு கஷ்டத்துக்குள்ளாக்குகிறீர்கள். நான் எங்கே என்ன பிழைவிட்டேன். நீங்கள் என்னைக் கடுமையாகச் சோதிப்பதேன்?" எனக் கோபத்துடன் நிலத்தில் போட்டேன். மகன் ஓடிவந்து அதைக் கையில் எடுத்துக்கொண்டார். கோபமும் இயலாத்தன்மையும் மேலோங்கின. சுவாமி ஏன் கைவிட்டார்?

அடுத்த நாள் சாயி சகோதரர்கள் என்னை விடியோ பதிப்பதற்கு ஏற்றவாறு திருத்திய மைக்கச் சொன்னார்கள். இதயத்தில் எனக்கு கொஞ்சம் ஊதியம் வேண்டுமென்று பிரார்த்தித்தேன். என்ன ஆச்சரியம்? அடுத்தநாள் சத்ய சாயி சர்வதேச நிறுவனம் முழுநேர விடியோக்களை திருத்தியமைத்து பதிக்கும் வேலையை செய்யமுடியுமா என்று கேட்டார்கள். ஆனந்தத்துடன் ஏற்றுக்கொண்டேன். சுவாமியின் கட்டளைப்படி நடந்து சுவாமிக்கு அருகாமையில் இருக்கும் வாய்ப்பைப் பேற்றேன். இதைத்தான் நான் கனவிலும் நினைத்தேன்.

ஜெய் சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரும் - ஏற்றுக்கொள் : தரும் - பெற்றுக்கொள்

உலக இச்சைகளுடனேயே உடமைகளையும் பெற்றுப் பற்றற்று வாழ்வது என்ற கருத்து புதியது. கடும் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதன் மூலம் சரீரம் யோகம் செய்வது போல பிறர் நமகக்கு இழைக்கும் துன்பங்களைத் தாங்கிக்கொள்வதன்மூலம் உள்ளம் தவம் செய்கின்றது. ஆரம்பக்கட்டத்தில் சிறிய துன்பங்கள்கூட பெரியதாகத் தெரியும். அது வளர வளர உள்ளம் மரத்துக்கொண்டே வரும். ஒரு கட்டத்தில் எதையும் தாங்கிக்கொள்கின்ற சக்தி வந்துவிடும்.

ஓரளவு துன்பம் வந்தால் அழுகை வருகிறது. தொடர்ந்து துன்பங்கள் வந்து கொண்டேயிருந்தால் அழுவதற்கும் சக்தி இல்லாமற போய் வெறுப்பும் விரக்தியும் கலந்த சிரிப்பு வருகின்றது. ஒரு கட்டத்தில் எந்தத் துயரும் வந்தாலும் சிரிப்பது பழக்கமாகி விடுகிறது. அதுவே ஞானம் வந்துவிட்டதென்பதற்கு அடையாளம்.

"ஆவீன மழை பொழிய இல்லம் வீழ...."
என்றொரு பாடல். இதன் கருத்து,
பசுமாடு கன்று போட்டதாம்
அடாத மழை பெய்தததாம்
வீடு விழுந்துவிட்டதாம்
மனைவிக்கு கடுமையான நோய் வந்ததாம்
வேலைக்காரன் இறந்துபோனானாம்
வயலில் ஈரம் இருக்கிறது.
விதைக்கவேண்டும் என்று ஓடினானாம்
வழியில் கடன்காரர்கள் மடியைப் பிடித்து இழுத்தார்களாம்
"உன் மகள் இறந்துபோனாள்" என்ற சாவுச் செய்தியோடு ஒருவன் வந்தானாம்
இந்தநேரத்தில் வீட்டுக்கு விருந்தாளிகள் வந்து சேர்ந்தார்களாம்
பாம்பு அவனைக் கடித்துவிட்டதாம்
நிலவரி வாங்க அதிகாரிகள் வந்து நின்றார்களாம்
குருக்களும் தட்சிணைப் பாக்கிக்காக வந்திருக்கிறாராம்.

ஒரே நேரத்தில் இவ்வளவும் வந்து சேர்ந்தால் ஒருவனுக்கு அழுகையா வரும்? இவ்வளவு துன்பங்களையும் சந்தித்த பின்பு ஒருவனது மனம் மரத்துப் போகும். மரத்துப்போன நிலையில் துன்பங்களைக் கண்டுபிடிக்காமல் அலட்சியப்படுத்தத் தோன்றும்.

"நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்ற சிறிதளவு இன்பமும் பெரியதாகத் தோன்றும் பேராசை அடிபட்டுப் போகும்.

பல ஆண்டுகள் தவம் செய்து பெறுகிற ஞானத்தைவிட இந்த ஞானம் அழுத்தமானது, ஆழமானது, உண்மையானது, உறுதியானது.

ஆகவே லௌகீக வாழ்க்கைதான் - அதில் ஏற்படும் இன்ப துன்பங்கள்தான் - ஒரு மனிதனைப் பக்குவம் பெற்ற ஞானியாக்குகின்றன.

எனக்கு இதிலும் அனுபவம் உண்டு. துன்பங்கள்தான் எமது குரு என்பதை மறக்கக் கூடாது.

பட்டறி கெட்டறி : - ஓர் கிராமிய வாக்கு. பட்டால்தான் அறிவு வரும். கெட்டால் தான் தெளிவு வரும். அறிவும் தெளிவும் வந்த பின்பு ஞானம் வரும்.

நன்றி : அர்தமுள்ள இந்துமதம், பாகம் - 02
கவிஞர் கண்ணதாசன்.

**"துன்பங்களே இன்பத்தின் வித்து":**
**- பகவான் சத்ய சாயி பாபா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலவிகாஸ் கல்வியினால் பெற்ற நன்மை

சுவாமியின் பொற்கமலப் பாதங்களைப் பணிந்து கொண்டு நான் பாலவிகாஷ் கல்வியினால் பெற்ற நன்மைகளையும் அதனூடாக நான் பெற்ற அனுபவங்களையும் உங்கள் முன்னிலையில் கூற இருக்கின்றேன். நான் எனது முதலாவது பாலவிகாஷ் கல்வியை யாழ்ப்பாணம் மத்தி சத்ய சாயி சேவா நிலையத்தில் ஆரம்பித்தேன். நான் முதன் முதலாக பஜனை எனது ஐந்தாவது வயதிலே "ஜெய் ஜெய் ஜெய் கணநாயகா" என்று தொடங்கிப் பாடும்பொழுது சுவாமி தனது பூவை விழச்செய்து ஆசீர்வாதம் அளித்தார். அன்று முதல் இன்றுவரை தொடர்ச்சியாக நான் சுவாமியின் பஜனைகளைப் பாடுகின்றேன். அங்கு எனக்குப் பலகலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் வாய்ப்பு சுவாமியின் ஆசீர்வாதத் தினால் கிடைத்தது. மற்றும் அங்கு நடைபெறும் யோகா பயிற்சிகளில் பங்குகொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. அதன்பின்னர் எனது ஒன்பதாவது வயதிலே நான் யாழ்ப்பாணம் சத்ய சாயி சேவா நிலையத்தில் எனது பாலவிகாஷ் கல்வியைத் தொடர்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

நான் இங்கு எனது பாலவிகாஷ் தொடர்கையில் எனக்குப் பல கிடைத்தற்கரிய விடயங்களை கற்றுக்கொள்ளக் கூடியதாக அமைந்தது. அவையாவன பஜனைப் பயிற்சி, வேதப் பயிற்சி, சுலோகங்கள், நற்பழக்க வழக்கங்கள், பிறருக்கு தன்னலமற்ற சேவை, புரிதல், பண்பாகப் பேசுதல், பெற்றோரை வணங்குதல், பெரியோரை மதித்தல், உயிர் களிடத்தில் அன்பு செலுத்துதல், நிலையத்தை சுத்தமாக வைத்தல், பூமாலை கட்டுதல், அலங்கார சேவைகள் போன்றவை மேலும் எனக்கு நிலையத்தில் நடைபெறும் சுவாமியின் விசேட தினங்களில் நாடகம், பாட்டு மற்றும் நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும் சந்தர்ப்பமும் அதனூடாக எனது திறமைகளை வளர்த்துக் கொள்ளும் ஆற்றலும் கிடைத்துள்ளது. முக்கியமாக 2023ஆம் ஆண்டு நடைபெற்ற சுவாமியின் சர்வதேச மாநாட்டில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சியில் பங்குகொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. இது எனது வாழ்வில் கிடைத்த மிகவும் சந்தோசமான நிகழ்வாக கருதுகிறேன். நான் சிறுவயதிலிருந்து இன்றுவரை தினமும் காலை 6 மணிக்கும் மாலை 6 மணிக்கும் ஓங்காரம், ஸ்ரீருத்ரம், பஜனை, காயத்ரீ




மந்திர உச்சாடனம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். அதன்பிறகு நான் "Om Sri SaiRam" என்று லிகித ஜெபம் எழுதுவேன். அதன் பிரதிபலனாக சுவாமி தனது ஆசீர்வாதத்தினை எனது லிகிதஜெப புத்தகத்தில் திருநீறு சொரிந்து ஆசீர்வாதம் செய்துள்ளார். இதன்மூலம் நான் அறிந்த விடயம் யாதெனில் பாலவிகாஷ் சிறுவர்களாகிய நாம் சுவாமிக்காக செய்யும் ஒவ்வொரு செயற்பாடுகளையும் அவதானித்துக் கொண்டு அதற்கு ஆசீர்வாதங்களையும் வழங்கிக் கொண்டு எங்களை மகிழ்ச்சிப்படுத்தி எங்களுடனேயே இருக்கிறார் என்பதை ஞாபகப் படுத்துகின்றார். எனவே பாலவிகாஷ் மாணவர்களாகிய நாம் பாலவிகாஷ் வகுப்பில் கற்றுக் கொடுக்கும் பாடங்களையும் பயிற்சி களையும் பின்பற்றி சுவாமியின் ஆசீர்வாதத் தினைப் பெற்று சுவாமியின் அன்பு மாணவர் களாகவும் சமூகத்தில் நல்ல சாயி குழந்தைகளாகத் திகழ்வோமாக.

ஜெய் சாயிராம்

பு. பிரசன்யா
சாயி ஆன்மீகக் கல்வி, பிரிவு 02,
யாழ். சாயி நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SSSIO
# சர்வதேச மாநாடு கென்யா

ஆபிரிக்காவிலுள்ள கென்யா (Kenya) நாட்டில் 28.06.2024 தொடக்கம் 01.07.2024 வரை மாநாடு நடைபெற்றது. அந்நாட்டில் கலவரம் தொடங்கி மாநாட்டிற்கு முன்பே அடங்கிவிட்டது. 38 நாடுகளிலிருந்து 400 பக்தர்கள் பங்கு பற்றினார்கள். இதில் 5 பக்தர்கள் இலங்கை யிலிருந்து பங்குபற்றினார்கள். சுவாமி தனது பௌதீக உடலில் ஜூன் மாதம் 1968ஆம் ஆண்டு அங்கே போயுள்ளார். 56 வருடங்களிற்குப் பின்பு அருவ நிலையில் திரும்பவும் தனது செயற்பாட்டினை நிலை நாட்டியுள்ளார். அந்நாட்டிலுள்ள மக்கள் சாயி சேவைகள், வனங்கள், விலங்குகள் பிரமிக்கத்தக்கதாக இருந்தன.

மாநாடு, பெனின் என்ற ஊரிலுள்ள சத்ய சாயி பாடசாலையைச் சேர்ந்த 5 ஆபிரிக்க மாணவர்கள், மஞ்சள் உடை அணிந்து கைகளைக் கூப்பியவண்ணம் சரியான உச்சரிப்புடன் இதயபூர்வமாக ஞாபகத்திலிருந்து வேதத்தை உச்சாடனம் செய்து தொடக்கி வைக்கப்பட்டது. சுவாமி கூறியபடி வேத உச்சாடனம் பல இடங்களில் சொல்லப்படுகிறது.

வேதத்தைத் தொடர்ந்து கென்யா பொலிஸ் குழுவினர் கென்யாவினதும் இந்தியாவினதும் தேசிய கீதத்தை இசைக் கருவிகள் மூலம் வாசித்தார்கள். இதைத் தொடர்ந்து அக் கிராமத்து முதியவர் ஆசிர்வாத உரையை அந்நாட்டு மொழியிலேயே பேசினார். இதனைத் தொடர்ந்து பங்குபற்றும் 38 நாடுகளின் தேசியக்கொடி மேடையேற்றப்பட்டது.

இம் மாநாட்டின் மைய வாக்கியம் சாயி (SAI) என்பதேயாகும். அதாவது சேவை (Service), புகழ்பாடுதல் (Adoration), ஞானம் அடைதல் (Illumination) என்பதேயாகும். சுவாமியும் இதைத்தான் கர்மமார்க்கம், பக்திமார்க்கம், ஞானமார்க்கம் என்று கூறியுள்ளார்.

3ஆம் நாள் மாநாடு இறைவனை அனுபவிக்கும் வழிகள், சந்தர்ப்பங்கள் முதலியவற்றைக் கொடுத்தது. இச் சந்தர்ப்பத்தில் சுவாமி 11.11.1968 இல் ஆற்றிய உரை ஞாபகப்படுத்தப்பட்டது. இதில் தன்னைத் தேடுதலின் போது சேவை செய்வதற்குரிய கருணை, பணிவு, தியாகம் ஆகியன இருக்கின்றதா என்பதை ஆராய வேண்டும் என்றும் இறைவனையே எங்கும் எப்போதும் எதிலும் காண வேண்டும் என்பதும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

Dr. நரேந்திரநாத் ரெட்டி, தலைவர் உரையில் மனிதன் உலகில் பற்று வைத்து வாழ்வதாலேயே துன்பம் விளைகிறதென்று கூறினார்.

கென்யா மந்திரி சபைச் செயலாளர் மாண்புமிக்க முசாலியா முடவாடி (H.E. Musalila Mudavadi) உரையாற்றினார். அவர் சாயி நிறுவனத்தின் மருத்துவ சேவை மார்ச் மாதம் 2024இல் பார்த்ததாகவும் கென்யா, உகண்டா, தான்சானியா ஆகிய நாடுகளிலிருந்து வந்த 5600பேர் பயனடைந்தார்கள் என்றும் இம்மாநாடு தனக்குக் கிடைத்த இரண்டாவது சந்தர்ப்பம் என்றும் கூறினார். **சத்ய சாயி பாபாவின் ஐந்து அடிப்படை மனித விழுமியங்களே உலகத்தின் யாப்பாக அமைய வேண்டும்** என்றார்.

பங்கு பற்றியவர்கள் தங்கள் தங்கள் நாட்டில் நடக்கும் செயற்பாடுகளை வெளிப் படுத்தினார்கள். கென்யா நாட்டிற்கான இந்தியத் தூதுவர் மாண்புமிகு நம்கியா உ கம்பா (Mrs. Namgya C Khampa) தனது உரையில் சத்ய சாயி பாபா பிரபஞ்சத்துக்கே உரியவர். அவரின் சேவைகள் உலகெங்கும் பரவியுள்ளதெனக் கூறினார்.

பிரசாந்தி சபை, சத்ய சாயி உலக அமைப்பு மற்றும் வலயத்திலிருந்து நிர்வாகிகள் உரை நிகழ்த்தினார்கள்.

விசேடமாக திரு. லியனார்டோ கட்டர் (Mr. Leonardo Gutter), திரு. அரவிந்த் பாலசுப்ரமண்யா, திரு. P.V. சாம்பசிவ ராவோ உரை நிகழ்த்தினார்கள்.

மேலும் சர்வமதக் கொள்கையாளர்கள் சேவையே கடவுளை அடையும் வழி என உரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்தினார்கள். கிசாயுவிலுள்ள சத்ய சாயி பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் உரையாற்றினார்கள். ஒரு மாணவன் தான் மருத்துவக் கல்வியில் இரண்டாம் ஆண்டில் படிப்பதாகவும் பட்டம் பெற்று தனது ஊர்மக்களுக்கு சேவை செய்ய சங்கல்ப்பம் பூண்டுள்ளதாகவும் சொன்னார். மருத்துவ முகாம் நடத்தும் வைத்தியர்களும் பேசினார்கள்.

சுவாமியின் 20.07.1996 திகதிய உரை ஞாபகப்படுத்தப்பட்டது. Dr. அனுபொம் கங்கூலி (Dr. Anupom Ganguli) எவ்வாறு சேவையின் மூலம் சுவாமியை வழிபடலாமென்று கூறினார்.

இரண்டாம் நாள் மச்சாகோஸ் பிராந்திய (Machakos county) ஆளுநர் மாண்புமிகு வாலின்ய ன்டெற்றி (H.E. Wavinya Ndeti) தனது உரையில் SSSIO வின் சேவையைப் பாராட்டி இன்னும் மேன்மேலும் இறைவன் அருள் வேண்டு மென்று பிரார்த்தித்தார். நிறுவன நிர்வாகிகள் நாட்டிலுள்ள சகல ஆசிரியர்களுக்கும் சத்ய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியைப் பற்றிப் போதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மூன்றாம் நாள் இருமுறை (2026. 2020) ஒலிம்பிக் மரதனில் தங்கப்பதக்கங்கள் எடுத்த Dr. எலூயிட் கிப்சோகே (Dr. Eluid Kipchoge) கல்விதான் சமத்துவத்தை எற்படுத்தும் என்று உரைத்தார்.

Dr. சுரேஷ் கோவிந்த் கலந்துரை யாடல்களை நெறிப்படுத்தினார். 9ஆவது வலயத்திலுள்ள சாயி நிறுவன நிர்வாகிகள் அவர்களின் கடின உழைப்பிற்கு பாராட்டப் பட்டார்கள்.

நாலாம் நாள் உதிரு மற்றும் கிசாயு (Uthiru and Kisaju) சத்ய சாயி பாடசாலைகளுக்கும் நெய்றோபி வனவிலங்கு பாதுகாப்பு வனத்திற்கும் (Nairobi National Park), நஸ்வஷா குளத்திற்கும் (Lake Nasvasha) விஜயம் செய்தார்கள்.

எல்லோரும் பகவானின் எங்குமிருக்கும் தன்மையை உணர்ந்து ஆனந்தமடைந்தார்கள்.

ஜெய் சாயிராம்

நன்றி : Mr. Ashok K. Sakhrani
Eternal Companion, Vol-3, Auguest_2024.

## உன்னையே நீ உணர் !

மகாகவி காளிதாசர் ஒருமுறை பயணிக்கும் போது அவருக்கு மிகவும் தாகமாக இருந்தது. அப்போது ஒரு பெண் கிணறு ஒன்றிலிருந்து தண்ணீர் எடுப்பதைப் பார்த்த அவர் அப் பெண்ணிடம் "அம்மா கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்" என்று கேட்டார். அப்பெண் "தருகிறேன். ஆனால் நீங்கள் யார்? உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்" என்றாள்.

தான் யார் என்று அறிய வேண்டிய தில்லையே என்று எண்ணிய காளிதாசர், **"நான் ஒரு பயணி"** என்றார். அப்பெண், "இந்த உலகில் இரண்டே பயணிகள்தான் உண்டு. சூரியனும் சந்திரனும். அவை சதா உதித்து மறைந்துகொண்டிருக்கின்றார்கள்" என்று கூறினாள்.

காளிதாசன், **"நான் ஒரு விருந்தினர்"** என்றார். அப்பெண் "இந்த உலகில் இரண்டு விருந்தினர்களே உள்ளனர். அவை செல்வமும் இளமையும். இரண்டும் தற்காலிகமானவை. அவைதான் விருந்தினர்" என்றாள்.

காளிதாசர், **"நான் ஒரு பொறுமைசாலி"** என்றார். அதற்கு அப்பெண், "இந்த உலகில் இரண்டு பொறுமைசாலிகள் உள்ளனர். ஒன்று பூமி மற்றையது மரம்" என்றாள்.

காளிதாசர் எரிச்சல் கொண்டு, **"நான் ஒரு பிடிவாதக்காரன்"** என்றார். அப்பெண், "இரண்டே இரண்டு பிடிவாதக்காரர்கள்தான் உள்ளார்கள். அவை நகமும் தலைமயிரும் ஆகும். வெட்ட வெட்ட வளர்வார்கள்" என்றாள்.

காளிதாசர் கோபத்துடன் **"நான் ஒரு முட்டாள்"** என்றார். அப்பெண் சிரித்துக் கொண்டே, "அறிவும் ஆற்றலும் இல்லாத அரசனும் அவரைப் புகழ்ந்து துதிபாடும் அமைச்சரும் இருவருமே முட்டாள்கள்" என்றாள்.

காளிதாசர் தான் தோல்வியடைந்ததை ஏற்றுக்கொண்டு அப் பெண்ணின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்.

அப்பெண் அன்னை சரஸ்வதியாகக் காட்சி அளித்து "நீ புத்தி உள்ளவன். ஆனால் உன்னையே நீ உணர்ந்தால்தான் ஞானி. தன்னை அறியாமல் உச்சநிலையை அடையமுடியாது" என்று கூறி ஆசீர்வதித்தார்.

நன்றி : இராமகிருஷ்ண விஜயம்
செப். 05, 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியின் மகா வாக்கியங்கள்

- ஸ்ரீ பிறேம் அனோஷ்

பாகம் 01 (அறிமுகம்)

சுவாமி ஒருதடவை வேதம் மற்றும் வேதாந்தங்களைப் பற்றி ஒரு சொற்பொழிவு கொடுத்துக்கொண்டிருந்தார். அப்போது திரு. பகவந்தம் காரு என்பவர் சுவாமியின் சொற்பொழிவுகளை மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு பெரிய விஞ்ஞானி. சுவாமி அவருக்கு நிறைய அனுபவங்களை கொடுத்துள்ளார். என்ன இருந்தாலும் விஞ்ஞானியின் மனப்போக்கு எப்போதும் கேள்வியாகவே இருக்கும். எனவே சுவாமி வேதங்களைப் பற்றிப் பேசும் போது அவர் நினைத்தார், இதெல்லாம் நிஜமாகவே வேதங்களில் இருக்கின்றதா? ஆகவே வேதத்தில் அறிவாற்றல் நிறைந்த திரு. காமாவதானி காரு விடம் கேட்டாராம், சுவாமி வேதத்தைப் பற்றி சொல்கின்றாரே இவையெல்லாம் உண்மையாகவே வேதத்தில் இருக்கின்றதா? என்று. அதற்கு காமாவதானி காரு கூறினார், அதாவது சுவாமி சொல்வதெல்லாம் வேதத்தில் இருக்கின்றது. அதைப்பற்றி நீங்கள் சந்தேகப்பட வேண்டாம். ஆனால் அது மட்டுமல்ல, **"சுவாமி சொல்வதுதான் வேதம். அதையும்தாண்டி சுவாமியின் வார்த்தைதான் மந்திரம்"** என்று கூறினார்.

**மந்திரம்** எனும் வார்த்தைக்கு மிகவும் அழகான வரைவிலக்கணம் உள்ளது. அதாவது எதை மனதில் தொடர்ந்து ஆழமாக மனனம் செய்கின்றோமா அதுவே மந்திரம் எனப்படும். "த்ராயதே" என்றால் **பாதுகாப்பது** என்று பொருள். பவசாகரத்தில் இருந்து நம்மை கரை சேர்க்கக்கூடிய சக்தி அந்த மந்திரத்திற்கு உள்ளது. அதாவது எந்த விடயத்தை நாம் மனதில் மனனம் செய்கின்றோமா, அப்படி செய்வதனால் **எது நம்மைப் பாதுகாக்கின்றதோ** அதுதான் மந்திரம். இது எமக்கு எதை விளக்குகின்றது என்றால், சுவாமி சொன்ன வார்த்தைகளை நாம் மிக ஆழமாக சிந்தித்தோமேயானால் அது நம்முடைய வாழ்க்கையை மாற்றிவிடும். அத்துடன் எது நம்மை எமது குறிக்கோளிற்கு கூட்டிச் செல்லும். இதுவே அதன் உண்மையான அர்த்தம்.

நாம் அனைவருமே ஒருவிதத்தில் வாழ்க்கையை வாழ்கின்றோம். வாழ்வில் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் வெவ்வேறு விதமாக நடந்து கொள்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் சுவாமியிடம் ஒவ்வொரு ஆளுமை (Personality) உடன் வந்திருக்கின்றோம். ஒவ்வொரு தத்துவக் கோட்பாடுகளுடன் (Philosophy) வந்திருக்கின்றோம். ஆனால் சுவாமி சொல்கின்ற அந்த வார்த்தையை நாம் மனனம் செய்தால் நம்முடைய ஆளுமை (Personality) மற்றும் சுவாமியின் எதிர்பார்ப்பு (Expectation) இவை இரண்டும் கலந்து நாம் புதிய மனிதராக மாறுவோம். சுவாமியிடம் வந்ததற்கான நோக்கமே இதுதான். நான் சுவாமியிடம் வருவதற்கு முன்னால் ஒருவிதமாக இருந்தேன். சுவாமியிடம் வந்ததற்குப் பின் நான் இந்தமாதிரி மாறியிருக்கின்றேன். நாம் ஒரு குருவிடம் சென்றால் குரு ஒரு மந்திரம் கொடுப்பார். அதை நாம் ஜெபித்தால் ஆன்மீக அனுபவங்களைப் பெற்று முன்னேறிச் செல்லலாம். சுவாமி சொல்கின்ற ஒவ்வொரு வார்த்தையும் மந்திரம். சுவாமி எமக்கு தனியாகத்தான் சொல்லவேண்டும் என்றில்லை. நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். நாம் கடைப் பிடிப்பதற்காக சொற்பொழிவுகள், வாஹினிகள் மூலமாக சுவாமி எமக்கு பல விடயங்களைத் தந்துள்ளார்.

சுவாமியின் செய்திகள் (Messages), எழுத்துக்கள் (Writings) என்று பார்த்தோமே யானால் ஆயிரக்கணக்கான சொற்பொழிவுகளை சுவாமி வழங்கியுள்ளார். ரேடியோசாயி இல் 24 மணிநேரமும் சுவாமியின் குரலைக் கேட்கலாம். அதேபோல சுவாமி 15 வாஹினிகளை எழுதியுள்ளார். சுவாமி கைப்பட எழுதிய வாஹினிகளை சுவாமி இருக்கும் போதே மொழி பெயர்த்து அப்படியே நம்மிடம் வந்ததுதான் இந்த வாஹினிகளின் தொடர். பிரேம வாஹினி, தர்ம வாஹினி, தியான வாஹினி, கீதா வாஹினி, ராமகதாரச வாஹினி, முதலியன. சுவாமி எழுதிய கடிதங்களும் இருக்கின்றன. அதைப் பற்றியும் நாம் கதைத்திருக்கின்றோம். அதேபோல சுவாமியுடனான உரையாடல்களும் உள்ளன. நேர் காணல்களின் போது சுவாமி கூறிய வார்த்தைகள், வராண்டாவில் (Portico) இல் நின்று பக்தர்களிடம் பேசும் போது சுவாமி விபரித்த சில விடயங்களும் உள்ளன. இதெல்லாம் தாண்டி சுவாமியின் சிறப்புத் தன்மை (Speciality) என்று பார்த்தோமேயானால் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான மற்றும் மிருதுவான வாசகங்கள். இவை கேட்கும் போது மிக எளிமையானதாக இருக்கும். ஆனால் அவை மிக ஆழ்ந்த பொருள் கொண்ட வாசகங்களாகும்.

அத்வைத வேதாந்தத்தில் மகாவாக்கியங்கள் எனும் ஒரு கருத்து (Concept) உள்ளது எம் அனைவருக்கும் தெரியும். 4 வேதங்கள் உள்ளன. இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என்பனவாகும். அந்த வேதங்களுடைய சாராம்சம்தான் வேதாந்தம் என்பார்கள். சுவாமி சொல்வார், இதுதான் அந்தம் என்று. வேதத்தின் கடைசிப் பகுதியில் வருவதுதான் வேதாந்தம் ஆகும். வேதாந்தத்தில்தான் உபநிடதங்கள் எல்லாம் வருகின்றன. வேதங்களினுடைய சாராம்சம் உபநிடதங்களில் உள்ளன. உபநிடதங்களில் உள்ள ஒவ்வொரு கூற்றுக்களும் (Statements) வேதங்களின் சாரம் என்கிறார்கள். அவற்றைத் தான் மகாவாக்கியம் என்று கூறுகின்றோம்.

**மகாவாக்கியம் என்று சொல்லும் போது சாம வேதத்தில் "தத் த்வம் அஸி" (நீயே பிரஹ்மமாக இருக்கிறாய்) என்பது மகாவாக்கியம். அதேபோல் இருக்கு வேதத்தில் "பிரக்ஞானம் பிரஹ்மா" (தூய அறிவே பிரஹ்மம்) என்பது மகாவாக்கியம் ஆகும். யஜுர் வேதத்தில் "அஹம் பிரஹ்மாஸ்மி" (நான் பிரஹ்மமாக இருக்கிறேன்), அதர்வண வேதத்தில் "அயம் ஆத்மா பிரஹ்மா" (தூய அறிவே பிரஹ்மம்) என்பன மகாவாக்கியங்களாகும். வேதங்களின் பூரணமான சாரம் (Complete essence) இவ் மகாவாக்கியங்களுக்குள் உள்ளன.**

இதுபோல நிறைய மகாவாக்கியங்களை சுவாமி எமக்கு கொடுத்துள்ளார். "Love All, Serve All", "Help Ever, hurt Never", "Work is worship", "Duty is God". இதெல்லாம் கேட்கும்போது ரொம்ப கவர்ச்சியாக இருக்கின்றது. இந்த நவீன யுகத்தில் இதுபோல ஏதாவது சுவாரஸ்யமாக கேட்டால் உடனேயே அதை Whatsapp இல் Status ஆக வைத்துவிடுவோம். இல்லாவிடில் X (twitter) பக்கம், Facebook இல் பதிவிட்டுவிடுவோம். நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை. ஆனால் இதுதானே இந்தக் காலத்திலுள்ள போக்கு. அது தவறில்லை. மற்றவர்களுக்கும் அக் கருத்தைப் பகிரவேண்டும் என்று எண்ணுவது தவறில்லை. ஆனால் சுவாமி என்ன சொல்கிறார் என்றால், ஏதாவதொரு நல்ல வார்த்தை அல்லது செய்தி நம்மிடம் வருகின்றதென்றால் **முதலில் நாம் அதை மனனம் செய்ய வேண்டும். அதைக் கடைப் பிடிக்க வேண்டும். பின்புதான் அதை மற்றவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.** இந்த வாசகங்கள் சுவாமி எமக்கு கொடுத்த மகா வாக்கியங்கள். அதை நாம் கடைப் பிடிக்க வேண்டும்.

சுவாமி அருளுரை ஆற்றியதன் பின்பு மாணவர்களிடம் கேட்பார், "தனது உரை எப்படி இருந்தது?" என்று. சுவாமியிடம் பிரம்மாதமாக இருந்தது என்று கூறினால் சுவாமி சொல்வார், "நீ என்னை பாராட்ட வேண்டும் என்பதற்காக நான் கேட்கவில்லை. நான் சொன்னதில் உனக்கு என்ன புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது என்றுதான் கேட்டேன்" என்பார்.

சுவாமி கூறிய Love All ; Serve All என்பதை எடுத்துப் பார்த்தோமேயானால் எங்களுடைய வாழ்க்கையை மாற்றக்கூடியளவு சக்தியை இவ் வாசகம் கொண்டுள்ளது. சுவாமியின் ஒவ்வொரு வாசகமும் அவர் வழங்கிய எத்தனையோ நூற்றுக்கணக்கான அருளுரைகளினுடைய சாராம்சமாகும். அதை நாம் ஒரு அத்தியாயத்தில் பேசிவிடமுடியாது. பேசுவதற்கான தகுதியும் இங்குள்ள யாருக்குமே இல்லை. சுவாமி கூறிய வாசகங்களை மனனம் செய்து அவற்றை நேர்மையாக கடைப்பிடிப்பதே இத் தொடரின் நோக்கமாகும்.

சுவாமியின் இன்னொரு சிறந்த பக்தர் மற்றும் சிறந்த அறிஞர் பேராசிரியர் V. K. Gokak. இவர் சுவாமியின் பல்கலைக்கழகத்தினுடைய முதலாவது உபவேந்தர். அவர் ஒரு மிகச்சிறந்த ஆங்கில வித்துவான் அவர் Oxford பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியத்திற்கான முதுநிலைப் படிப்பை மேற்கொண்டார். அங்கும் அவர் முதல்நிலை மாணவராகத் திகழ்ந்துள்ளார். அவர் ஆங்கிலத்தில் எவ்வளவு புலமை வாய்ந்தவராக இருந்தாரோ அதே அளவு கன்னட மொழியிலும் புலமை வாய்ந்தவராக இருந்தார். எளிய முறையில் சொன்னால் He is the man of words. அவர் ஒருநாள் சுவாமியின் தரிசனத்திற்காக பிருந்தாவனத்தில் நின்று கொண்டிருந்தார். சுவாமி அவரிடம் சென்று ஒரு சிறிய கேள்வி கேட்டாராம். What is love? என்று சுவாமி கோகக்கிடம் வினவினார். அந்த அனுபவத்தைப் பற்றிப் பின்னைய நாட்களில் கோகக் அவர்கள் பேசும்போது "நான் எவ்வளவோ படித்துள்ளேன், எத்தனையோ புத்தகங்கள் எழுதியிருக்கின்றேன். ஆனால் சுவாமி என்னிடம் What is Love? என்று கேட்டபோது எனக்கு வார்த்தையே இல்லை. அதை எப்படி விபரிப்பது என்றே தெரியவில்லை"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பிரம்மித்துப் போயிருந்தார்.

அப்பொழுது மிக அழகாக புன்னகைத்து விட்டு சுவாமி சொன்னாராம் "Love is Selflessness, Self is Lovelessness". மிகவும் எளிய வார்த்தைகள். இவ்வாறு சுவாமி கூறிவிட்டு கோகக் அவர்களை தட்டிக்கொடுத்துவிட்டு சுவாமி சென்றுவிட்டாராம். சுவாமி சென்றபிறகு கோகக் அவர்கள் நினைத்தாராம் அன்பு (Love) என்ற வார்த்தையை இதைவிட அழகாக யாராவது விளங்கப்படுத்த முடியுமா? என்று. ஒரு எளிமையான வாசகத்தினுள் ஒரு அழகான கருத்தை சுவாமி கூறியுள்ளார். ஆனால் அந்த அறிவு எமக்கு கிடைக்கவேண்டுமென்றால் அந்த வாசகத்தை மனனம் செய்தால் மட்டும் போதாது அதை எம் வாழ்வில் கடைப்பிடிக்கவும் முயற்சி எடுக்கவேண்டும்.

சுவாமிக்கும் அவரது மாணவர்களுக்கும் இடையில் நிறைய தடவை ஒரு விடயம் நடக்கும். எங்களுக்கு எப்பவுமே எதற்கு என்று புரியாது. திடீர் என்று சுவாமிக்கு ஏதாவது கோபம் வந்துவிடும். மாணவர்களுடன் அவர் மாறிவிடுவார். சுவாமி அதிருப்தி அடைந்தால் பேசமாட்டார். மாணவர்கள் அமர்ந்திருக்கும் பக்கம் வரமாட்டார். பஜனையின்போது மாணவர்களைப் பார்க்காது கண்ணை மூடிக் கொண்டிருப்பார். இதெல்லாம் சுவாமி மாணவர்கள் மீது கோபமாக இருக்கின்றார் என்று வெளிப்படுத்துவதற்கான செயல்களாகும். சுவாமிக்கு கோபம் என்பது இல்லவே இல்லை. இந்த விடயம் எல்லோருக்கும் தெரியும். இந்தமாதிரி சுவாமி செய்வதால் மாணவர்கள் தாம் என்ன தவறு செய்திருப்போம் என்று ஆழ்ந்து சிந்திக்க தொடங்குவார்கள். பொதுவாக இது ஒன்று அல்லது இரண்டு கிழமைகளுக்கு நீடிக்கும். இதைத் தாங்கமுடியாத மாணவர்கள் தாங்கள் ஏதாவது தவறு செய்திருந்தால் தங்களை மன்னிக்குமாறு சுவாமியிடம் கேட்டுக்கொள்வார்கள். "நாங்கள் ஏதேனும் தவறுகள் செய்திருந்தால் கூறுங்கள். நாம் அதை சரிசெய்துகொள்கிறோம்" என்று மாணவர்கள் சுவாமியிடம் கேட்பார்கள். இந்தமாதிரி ஒருதடவை நடந்தபோது மாணவர்கள் சுவாமியிடம் சென்று அவரைச் சூழ்ந்துநின்று சுவாமியை தங்களோடு பேசுமாறு கேட்கப் போவதாக முடிவுசெய்தனர்.

அதே போல சுவாமி தரிசனத்திற்கு வருகிறார். உடனே மாணவர்கள் சுவாமியை சூழ்ந்துகொள்கின்றனர். பின்பு அனைத்து மாணவர்களும் அழ ஆரம்பிக்கின்றார்கள். சுவாமி தயவுசெய்து எங்களிடம் பேசுங்கள்" என்று மாணவர்கள் கேட்கின்றனர். சுவாமி மாணவர்களைப் பார்த்து என்ன வேண்டும்?" என்று கேட்டாராம். ஒரு பையன் எங்களிடம் பேசுங்கள் சுவாமி" என்கின்றான். சுவாமி அவர்களைப் பார்த்து சொன்னாராம், "நான் உங்களுடன் பேசிக்கொண்டுதானே இருக்கின்றேன்". மாணவர்களுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. "நீங்கள் எப்பவும் போல் எங்களுடன் பேசவேண்டும்" என்று மாணவர்கள் கேட்டனர். எப்பவும் போல பேச வேண்டுமென்றால் என்ன அர்த்தம்?" என்று சுவாமி கேட்டார். "நாங்கள் உட்கார்ந்திருக்கும் பகுதிக்கு அருகில் நீங்கள் வருவீர்கள். ஆனால் இப்போது நீங்கள் எங்களுக்கு அருகிலேயே வருவதில்லை" என்று பையன் கூறுகின்றான். சுவாமி சொன்னாராம் "அப்படியா? வழிவிடுங்கள்" என்று கூறிவிட்டு மிக வேகமாக மாணவர்களுக்கு இடையே நடந்துவிட்டு யாரிடமும் எதுவும் பேசாமல் தலையை குனிந்தபடி இருந்தார். சுவாமி. இதற்குமேல் மாணவர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. "சுவாமி தயவு செய்து எங்களுடன் வழமைபோல் இருங்கள். நாங்கள் ஏதாவது தவறு செய்தால் மன்னித்துவிடுங்கள்" என மாணவர்கள் கூற சுவாமி சொன்னாராம் ஒரு வார்த்தை, "Boys, What is the purpose of Swami coming into your life?" என்று. சுவாமி உங்களுடைய வாழ்க்கைக் குள் வருவதற்கான காரணம் என்ன? என்று கேட்டாராம். "நீங்கள் எல்லாம் என்னை விரும்புவீர்கள் என்பதற்காக நான் உங்களுடைய வாழ்க்கைக்குள் வந்தேனா?" என்று சுவாமி கேட்டார். நாம் வாழ்க்கையில் எத்தனையோ விடயங்களை விரும்புகின்றோம். ஒரு நல்ல வீடு, கார், சாப்பாடு எனப் பலவற்றை விரும்புகிறோம். "சுவாமி இந்த பட்டியலில் இன்னுமொரு பொருளா?" அடுத்தது சுவாமி கூறியது மிகவும் வலிமிக்க ஒரு விடயம். "Even a dog likes it's owner" என்று சுவாமி கூறினார்.

"You all like Me like that. That's not why I have come in to your life". அதாவது "ஒரு நாய் கூட தனது எஜமானனை விரும்புகின்றது. நீங்களும் என்னை அதுபோலத்தான் விரும்புகிறீர்கள். ஆனால் அதற்காக நான் உங்கள் வாழ்க்கைக்குள் வரவில்லை".

சுவாமி கூறினார், "I don't want my students and devotees to like Me, I want them to love Me". "எனது மாணவர்களும் பக்தர்களும் என்னை விரும்ப வேண்டும் என்று நான் நினைக்க வில்லை. அவர்கள் என்னை நேசிக்க வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நினைக்கிறேன். என்று சுவாமி கூறினார். சுவாமியை நேசிப்பதென்றால் சுவாமியினுடைய செய்தியை நேசிப்பதாகும். **சுவாமியின் வார்த்தைகளுக்கு நாம் கவனம் செலுத்த வேண்டும். இதுவே சுவாமியை மதிப்பதாகும்.**

நாம் செய்த எந்த நல்ல காரியத்தினால் சுவாமி தன்னை எம்முடைய வாழ்க்கைக்குள் கொண்டுவந்தார் என்று எமக்கு தெரியாது. தெரிந்தும் எதுவும் செய்யப் போவதில்லை. ஆனால் இந்த வாய்ப்பு நமக்கு இந்த வாழ்க்கையில் கிடைத்துள்ளது. சுவாமியை வெறும் ஒரு படமாக நம்முடைய பூஜை அறையில் வைத்து காலை, மாலையில் பார்த்து வழிபடுவதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் சுவாமியுடனான எமது உறவு அவ்வளவு தானா? இல்லை சுவாமியைப் பார்த்து "சுவாமி உங்களுடைய உண்மையான அன்பு எனக்கு வேண்டும்" என்று நாம் நினைத்தால் சுவாமியின் வார்த்தைகளில் நாம் கவனம் செலுத்தவேண்டும். அவற்றை நாம் மனனம் செய்யவேண்டும்.

இதே போன்று சுவாமி மாணவர்களுடன் Upset ஆக இருந்த இன்னொரு சூழ்நிலையில் "Please சுவாமி எங்களிடம் பேசுங்கள், Please சுவாமி எங்களைப் புறக்கணிக்காதீர்கள், Please சுவாமி எங்களை மன்னியுங்கள்" என்று அனைத்து மாணவர்களும் சுவாமியை இவ்வாறு கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுக்குள் மற்ற வார்த்தைகள் எல்லாம் அப்படியே மறைந்து விட்டன. பின்பு வெறும் Please சுவாமி, Please சுவாமி.... என்ற வார்த்தைகள்தான் கேட்டுக் கொண்டிருந்தன. இந்தக் காட்சியை மனதில் நினைத்துப் பாருங்கள் சுவாமி எதுவும் சொல்லாமல் அனைவர் கூறுவதையும் கேட்டுக் கொண்டிருந்தார். இறுதியாக சுவாமி கூறினார், "**நானும் அதைத்தான் சொல்கின்றேன்.** Please சுவாமி, Please சுவாமி, Please சுவாமி..." எவ்வளவு ஒரு அழகான விடை. பகவத்கீதை, பாகவதம் என்பவற்றில் பெரிய பெரிய சுலோகங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் சுவாமியின் அன்பை பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை சுவாமி இரண்டே வார்த்தைகளில் சொல்லிவிட்டார். Please சுவாமி. நான் சுவாமியை எவ்வாறு மகிழ்விப்பது? என்ன செய்தால் சுவாமி என்மீது மகிழ்ச்சி அடைவார்? இதற்கு நாம் மிக முக்கியமாக செய்ய வேண்டியது சுவாமி சொன்ன வார்த்தைகளை ஆழ்ந்து கவனித்து அவற்றை மனனம் செய்ய வேண்டும்.

இந்த நிகழ்ச்சியில் இதுபோன்ற சிறிய வாசகங்களைப்பற்றி கதைக்கப் போகின்றோம். இவை பார்ப்பதற்கு எளிய வாசகங்கள் போல இருக்கலாம். "Love All ; Serve All", Help Ever ; Hurt Never" என்பதெல்லாம் வெறும் நான்கே வார்த்தைகள் தான். ஆனால் இதைப் புரிந்துகொள்ள முயற்சி எடுத்தோமேயானால் அது எவ்வளவு ஆழமான விடயம் என்று எமக்கு தெரியவரும். மிகவும் முக்கியமானது என்னவென்றால் இவ் வாசகங்களை நாம் புரிந்துகொள்ள முயற்சி செய்யச் செய்ய எம்முடைய வாழ்க்கையும் மாறும். நாம் சுவாமியிடம் கொடுப்பதற்கான உண்மையான காணிக்கையும் இதுதான். சுவாமி என்னுடைய வாழ்க்கைக்குள் வருவதற்கு முன்னால் இருந்த என் ஆளுமையும் (Personality) சுவாமி என்னுடைய வாழ்க்கைக்குள் வந்த பிறகு என் Personalityயும் வித்தியாசமாக இருக்கவேண்டும். அதுதான் சுவாமிக்கு நம்முடைய காணிக்கையாக அமைய வேண்டும்.

## பாகம் 02

சுவாமி சொன்கின்றார், குருபூர்ணிமா என்பது வியாசபூர்ணிமா என்று. ஏனெனில் வியாசர்தான் வேதத்தை இருக்கு, யஜுர், சாமம், அதர்வனம் என எமக்கு வகுத்துத் தந்தவர். ஆனால் இதில் கூறப்பட்ட அடிப்படை விடயங்கள் சாதாரண மக்களுக்கு புரிய வேண்டும் என்பதற்காக கதைகள்மூலம் புரியவைப்பதற்காக 18 புராணங்களை எழுதினார். இவ் 18 புராணங்களையும் எழுதிய வியாசர் அவற்றுள் அடங்கியுள்ள சாராம்சத்தை அழகாக ஒரு வாக்கியமாக கூறியுள்ளார். அதாவது **"பரோப கார புண்யாய பாபாய பர பீடனம்"**. இதன் விளக்கம் என்ன வெனில் மற்றவர்களுக்கு உதவி செய்வது புண்ணியம். மற்றவர்களை புண் படுத்துவது பாவம். சுவாமி எப்போது எல்லாம் அவருடைய உரையில் இச் சுலோகத்தைப் பற்றி கூறுகின்றாரோ அப்போதெல்லாம் சொல்வர், நானும் இதைத்தான் உங்களுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றேன். "Help Ever ; Hurt Never" எப்போதும் உதவி செய் ஒருபோதும் துன்புறுத்தாதே.

சுவாமி இதில் இரண்டு விடயங்களை உள்ளடக்கியுள்ளார். Help Ever அடுத்தது Hurt Never. சுவாமி Hurt never என்ற விடயத்தை இரண்டாவதாக கூறியிருந்தாலும் இதற்கே சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகளவு முக்கியத்துவத்தை கொடுத்திருக்கின்றார். இதை சுவாமி ஒரு உதாரணம்மூலம் தெளிவாக விளங்கப்படுத்தியுள்ளார். அதாவது ஒரு விவசாயி எவ்வாறு வயலை பண்படுத்துகின்றானோ அவ்வாறே எமது இருதயத்தையும் பண்படுத்தவேண்டும் என்று. இதில் இரண்டு வகையான செயற்பாடுகள் நடைபெறும். **முதலாவது வித்துவம் சம மார்க்கம்.** அதாவது உதாரணமாக விவசாயி தனக்குத் தேவையான பயிரை விதைக்க முன்பு அந் நிலத்தில் உள்ள களைகளை அகற்றுவார். இது எமது ஆன்மீகத்தில் எதைக் குறிக்கின்றது எனில் Hurt Never. அதாவது ஒரு விவசாயி எவ்வாறு தேவையில்லாத களைகளை அகற்றுகின்றாரோ அவ்வாறு எமது மனதில் இருந்து மற்றவர்களை புண்படுத்தும் குணாதிசயங்களை அகற்றுவது. இதுவே Hurt Never ஐ குறித்து நிற்கின்றது. அடுத்த செயற்பாடு **விதாயக மார்க்கம்.** உதாரணமாக விவசாயி நல்ல விதைகளை விதைப்பது. இது எமக்குள் நல்ல குணங்களை விதைப்பதைக் குறிக்கின்றது. இது Help Ever ஐ குறித்து நிற்கின்றது. இதில் இன்னுமொரு முக்கிய விடயமும் அடங்கியுள்ளது. அதாவது விவசாயி விதையை விதைக்கும்போது களைகளையும் அகற்றாமல் விட்டால் விதை வளர்வதற்குத் தேவையான சூரியஒளி நீர், பசளை அனைத்தையும் களைகளும் பெற்றுவிடும். இதனால் **வளர்ச்சி பாதிப்படையும்.** அதேபோலவே நாம் ஆன்மீக வளர்ச்சியடைகின்ற காலப் போக்கில் எம்மிடமுள்ள தேவையில்லாத தீய குணங்களை நாம் அகற்றாமல் இருந்துவிட்டால் மிகவும் ஆபத்தை விளைவிக்கும். ஆகவே தீய குணங்களை எம் மனதில் எப்போதும் வைத்திருக்கக்கூடாது என்று சுவாமி சொல்கின்றார்.

ஒருதடவை எனது சக மாணவர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் என்னுடன் ஒரு சுவாரஷ்யமான ஒரு முக்கியமான விடயத்தை பகிர்ந்து கொண்டார். அவர் சுவாமியின் கல்லூரியில் கல்வி கற்று முடிந்த பின்னர் இந்தியாவின் பாதுகாப்புப் படையில் சேர்ந்தார். பாதுகாப்புப் படையில் உள்ளவர்களும் துப்பாக்கியால் சுடுவதற்கு பயிற்சி எடுத்துக்கொள்கின்றனர். தீவிரவாதிகளும் அதே பயிற்சியை எடுத்துக்கொள்கின்றனர். தீவிரவாதிகளில் பயிற்சி எடுத்துக்கொள்பவர்கள் எல்லோரும் 16, 17 வயதைச் சேர்ந்தவர்களும் இருப்பர். ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களில் சுடுவதற்கான பயிற்சியை எடுத்தபின்னர் துப்பாக்கியை கையில் கொடுத்துவிட்டு அனுப்பிவிடுவர். ஆனால் பாதுகாப்புப் படையில் இருப்பவர்களுக்கு எத்தனையோ மாதங்கள் பயிற்சியின் பின்னர்தான் கைகளில் துப்பாக்கியை வழங்குவர். அந்த மாணவர் சொன்னார், துப்பாக்கியால் சுடுவதற்கு ஒன்று அல்லது இரண்டு நாட்கள்தான் பயிற்சி தேவை. ஆனால் கையில் துப்பாக்கியை வைத்துக் கொண்டு சுடாமல் இருப்பதற்கு ஆறு மாதங்கள் பயிற்சி தேவை. இது ஒரு உதாரணத்துக்காகத்தான். நாங்கள் ஆன்மீகத்தில் வளர வளர எங்களுடைய **சங்கல்ப்பங்கள் அல்லது எண்ணங்களுக்கு அதிக வலிமை ஏற்படும்.** நாங்கள் நினைத்தாலே அது நடப்பதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே ஆன்மீகத்தில் வளர வளர நாம் என்ன நினைக்கிறோம், என்ன பேசுகிறோம், என்ன செய்கிறோம் என்பதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். இதனால்தான் சுவாமி கூறுகின்றார், எங்களுடைய மனதில் மற்றவர்களை துன்புறுத்தவேண்டும் என்ற எண்ணமே வரக்கூடாது என்று. இதனால்தான் Hurt Never என்ற விடயம் முதலாவது படியாக இருக்கின்றது.

சுவாமி தனது உரையில் Hurt Never என்றால் நாம் யாரையும் அடிக்காமல் இருப்பது என்ற விடயத்தைத் தாண்டி எல்லா உயிர் உள்ள ஜீவராசிகளையும் துன்புறுத்தாமல் இருப்பதுடன் உயிர் அற்ற பொருட்களையும் மிகவும் கவனமாக கையாளவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார். இதற்கு சுவாமியை விட சிறந்த உதாரணம் வேறுயாருமே இல்லை. உதாரணத்திற்கு சுவாமி ஒரு மின்விசிறி சுவிட்சை போடுவது என்றால்கூட மெதுவாகத்தான் போடுவார். கதவை மெதுவாகத்தான் சாத்துவார். குடித்துவிட்டு தண்ணீர்க் குவளையை கீழே வைக்கும்போதுகூட மிகவும் மெதுவாகத்தான் வைப்பார். சுவாமி செய்கின்ற ஒவ்வொரு சின்னச்சின்ன விசயம்கூட **மிகவும் மெதுவாகவும் மென்மையாகவும் இருக்கும்.**

இந்த விடயத்திற்கு சுவாமி எவ்வளவு முக்கியம் கொடுக்கின்றார் என்பதை சுவாமியின் நெருங்கிய பக்தையான கீதாமோகன் அவர்களுடைய அனுபவத்தின் மூலம் பார்க்கலாம். அதாவது 1973ஆம் ஆண்டில் பிருந்தாவன வளாகத்தில் சுவாமியின் கோடைக்கால அருளுரை நடைபெற்றது. அன்று காலையில் நடைபெற்ற விடயங்களைப்பற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதா மோகனும் அவருடைய தோழியும் பிருந்தாவன வளாகத்தில் இருந்து ஒரு கல்வி வட்டம் போல கலந்துரையாடிக் கொண்டிருந் தார்கள். அந்த வேளையில் கீழே இருந்த புற்களை கையால் புடுங்கிப் போட்டவாறே கதைத்தனர். அப்போது கீதா மோகனின் தோழி சொன்னார் நாங்கள் இன்று அஹிம்சையைப் பற்றி கதைத்துக்கொண்டே புற்களை புடுங்கிப் போட்டுக்கொண்டு இருக்கின்றோம் என்று. அதற்கு கீதாமோகன் கூறினார், இவை புற்கள்தானே. உணர்வுகள் அற்றவை. ஆகவே பரவாயில்லை என்று கூறிவிட்டு கலந்துரையாடலை நிறைவுசெய்தனர். அடுத்தநாள் காலை சுப்ரபாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் பின்வரிசையில் இருந்தபடி கீதாமோகன் அவர்கள் தூங்கிவிட்டார். திடீர் என்று யாரோ தட்டுவதுபோல் இருந்ததாம். கண்திறந்து பார்க்கும்போது அது சுவாமி. கீதாமோகன் மிகவும் பயந்துவிட்டார். சுவாமி வெளியே வா உன்னோடு கதைக்கவேண்டும் என்று கூறினார். உடனே கீதாவும் சுவாமியின் பின்னால் சென்றார். சுவாமி அவரை தோட்டத்திற்கு கூட்டிச்சென்றுவிட்டு நேற்று மாலை இங்கு என்ன செய்தீர்கள் என்று கேட்டாராம். அதற்கு கீதா, சுவாமி ஒரு சிறிய கலந்துரையாடல். அஹிம்சையைப் பற்றி கதைத்தோம் என்றார். சுவாமி அதற்கு இல்லை. கதைத்தவாறு என்ன செய்தீர்கள்? என்று கேட்டுவிட்டு சுவாமியே அதற்கான பதிலையும் கூறினார். அதாவது அஹிம்சையைப் பற்றிக் கதைத்துக் கொண்டு புல்லைப் புடுங்கிப் போட்டீர்கள் என்று. அதற்கு கீதா, சுவாமி! அது புல் தானே. உணர்ச்சி அற்ற ஒரு விடயம்தானே. இதில் என்ன தவறு இருக்கின்றது? என்று கேட்கவே சுவாமி கீதாவின் கையைப் பிடித்து பக்கத்தில் உள்ள ரோஜா தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு மொட்டு மலராமல் இருந்தது. சுவாமி கூறினார், இதைப் பார். நான் உனக்கு அன்பின் பிரதிபலிப்பை காட்டுகின்றேன் என்று கூறி அந்த ரோஜா மொட்டைத் தொட்டவுடன் அம்மொட்டு உடனே மலர்ந்தது. இதை பார்த்த கீதா, சுவாமி அது நீங்கள் தொட்டதால் மலர்ந்தது என்று கூறினார். அதற்கு சுவாமி அப்படிச் சொல்லாதே. அன்பாக எந்தப் பொருட்களை அணுகினாலும் அது அதனுடைய response ஐ எமக்குத் தரும். நீயும் இப்போது இம்மொட்டைத் தொடு எனக் கூற அம்மொட்டு மலர்ந்தது.

**இனிமையான பேச்சு** - இது சுவாமிக்கு மிகவும் பிடித்தமான தலைப்பு. எப்போதும் எங்களால் மற்றவர்களுக்கு வேண்டியதை செய்ய முடியாது. ஆனால் நல்ல வார்த்தைகளை மற்றவர்களுக்கு கூறமுடியும். சுவாமியின் பக்தர் ஒருவர் 1960 அல்லது 1970களில் சுவாமியிடம் வந்தவர். அரசாங்கத்தில் பெரிய பதவியில் இருந்தவர். பின்பு புட்டபர்த்தியில் சுவாமியுடன் இருந்தார். சுவாமி அவருக்கு புட்டபர்த்தி உணவுச்சாலையை பார்த்துக்கொள்ளும் பொறுப்பைக் கொடுத்தார். சுவாமி ஒவ்வொரு நாளும் தூங்கும் முன் சுவாமிக்கு பாதசேவை செய்கின்ற ஒரு அரிய வாய்ப்பையும் பெற்றவர். சுவாமியோட மிகவும் நெருங்கிய பக்தர் பல வருடங்களாக சேவை செய்தார். திடீர் என்று ஒருவிதமான தோல்நோய் ஏற்பட்டது. அந்நோய் ஏற்பட்டதால் அவரது உடலில் இருந்து துர்நாற்றம் வீசியது. இதனால் யாருமே அவருக்கு அருகில் செல்வதில்லை. உணவை மட்டும் உரிய வேளைகளில் கொடுத்துவிட்டு வந்துவிடுவார்கள். ஏன் எனக்கு இவ்வாறான கஷ்டமான நிலைமை வந்தது என்று மனதிற்குள் நினைத்து வருந்தி கவலைப்பட்டவாறு இருந்தார். சுவாமி அவரைப் பார்க்க அவருடைய அறைக்குப் போய் அவருடைய கட்டிலில் உட்கார்ந்து கதைத்தார். சுவாமி கதைத்தவுடன் அவ் பக்தர் கேட்டார், ஏன் சுவாமி எனக்கு இந்த நிலைமை? உங்களை நம்பித்தானே நான் இங்கு வந்தேன். உங்களுக்கு சேவை செய்துகொண்டுதானே இருந்தேன். பின்பு ஏன் நான் இந்த அளவிற்கு கஷ்டப்படுகின்றேன்? ஏன் எனக்கு இந்த நிலைமை என்று சுவாமியைக் கேட்டார். அதற்கு சுவாமி சொன்னார், நீ எத்தனையோ வருடங்களாக எனக்காக Canteen இல் சேவை செய்திருக்கின்றாய். ஆனால் எவ்வாறு சேவை செய்தாய்? எத்தனையோ நாட்கள் பசி என்று வருபவர்களுடன் நீ புண்படுத்தும் வகையில் கதைக்கும்போது பசியுடன் திரும்பிச் சென்றிருக்கின்றார்கள். அந்த கர்மாதான் நீ இவ்வளவு துன்பப்படுவதற்குக் காரணம். ஆனால் நீ எனக்கு சேவை செய்திருக்கின்றாய். அதனால்தான் நான் உன்னைத் தேடி வந்திருக்கின்றேன். நீ சேவை செய்யும்போது செய்த தவறுகளால்தான் இப்போது இந்த நிலைமை என்று சுவாமி சொன்னார். **இது எல்லாம் எமக்கு மிகச் சிறந்த பாடம்.** நாங்கள் எவ்வளவு பெரிய பக்தராகவும் இருக்கலாம். ஆனால் சுவாமி எங்களிடம் இருந்து எதிர்பார்க்கும் அடிப்படைக்குணம், நாங்கள் எவ்வளவு எல்லோருடனும் அன்பாக பழகவேண்டும் என்பதையே குறிக்கிறது.

ஒருபக்கம் சுவாமி உண்மையே பேசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார். மற்றப்பக்கம் யாரையும் புண்படுத்தாமல் பேசு என்கின்றார். சில சந்தர்ப்பங்களில் நாங்கள் உண்மையைப் பேசினால் புண்படுத்துவது போலவே இருக்கும். ஒரு சின்ன கதாவில் சுவாமி அழகாகக் கூறுவார். ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு மகன் பிறக்கின்றார். அந்தப் பையனுக்கு ஜாதகம் எழுதும்போது குறைந்த ஆயுள் உள்ள பையன் என்ற விடயம் தெரிய வருகின்றது. இதனை ராஜாவிடம் கூறினார். கோபத்தில் சிறையில் அடைத்து விடுகின்றார் ராஜா. இறுதியாக ஒரு ஜோதிடர் வருகின்றார். அவருக்கும் இந்தவிடயம் நன்றாகவே தெரியும். உண்மையைக் கூறினால் ராஜா சிறையில் அடைத்துவிடுவார் என்ற விடயமும் தெரியும். ஆகவே அவர் ராஜாவின் ஜாதகத்தைப் பார்க்க வேண்டும் என்று கூறி அந்த ஜாதகத்தையும் பார்த்துவிட்டு ராஜாவிற்கு கூறினார், ராஜா உங்களுடைய ஜாதகம் மிகவும் அற்புதமானது. உங்களுக்கு உங்கள் மகனைவிட ஆயுட்காலம் அதிகம் என்று கூறினார். ராஜாவோ இதைக் கேட்டவுடன் மிகவும் சந்தோசப்பட்டார். இதில் அந்த ஜாதகம் பார்ப்பவர் ராஜாவை ஏமாற்ற வில்லை. ராஜாவின் மனதைக் கஷ்டப்படுத்தாமல் உண்மை கூறினார். சுவாமியும் இந்த நுட்பத்தை நாமும் பின்பற்ற வேண்டும் என்று கூறுவார். இந் நுட்பம் எமக்கு வரவேண்டும் எனில் **யாரையும் எமது வார்த்தையினால் புண்படுத்தக்கூடாது** என்ற மனப்பக்குவம் வந்துவிட்டால் இந் நுட்பம் எம்மை அறியாமலே எமக்குள் வந்துவிடும்.

இன்னொரு புராணக்கதை. விஷ்வா மித்திரர் வசிஷ்டருக்கு இடையில் நடந்த ஒரு விடயத்தைப் பற்றி சுவாமி அடிக்கடி சொல்வார். விஷ்வாமித்திரர் முதலில் கௌசிக் என்ற பெயருடன் மகாராஜாவாக இருந்தார். பின்பு வசிஷ்டரைப் போல தானும் பிரஹ்மரிஷி ஆக மாறவேண்டும் என்று தனது நாட்டைத் துறந்து துறவறம் பூண்டார். விஷ்வாமித்திரர் ராஜரிஷி ஆக மாறிவிட்டார். ஆனால் அதில் அவருக்கு சந்தோசம் கிடைக்கவில்லை. நானும் பிரஹ்மரிஷி ஆக மாறவேண்டும் என்று ஆசைப்பட்டார். இதற்கு தடையாக இருப்பது வசிஷ்டர் என நினைத்து அவரைக் கொலைசெய்யும் நோக்கில் செல்கின்றார். அப்போது வசிஷ்டரும் அவருடைய மனைவி அருந்ததியும் பௌர்ணமி நிலவைப் பார்த்துக் கதைத்துக் கொண்டு இருந்தனர். அப்போது வசிஷ்டர் கூறினார், இந்த நிலா எவ்வளவு அழகாக உள்ளது. விஷ்வாமித்திரருடைய தபஸ் போல மிகவும் பிரகாசமாக இருக்கின்றது என்று கூறினார். இதனைக் கேட்ட விஷ்வாமித்திரர் இவரைப் பார்த்து நான் தவறாக நினைத்து விட்டேனே. என்னை வஷிஷ்டர் எவ்வளவு உயர்வாக நினைக்கின்றார் என்று உணர்ந்து அன்றிலிருந்து அவருக்கு வசிஷ்டர்மீது அன்பு ஏற்பட்டது. நாங்களும் முடிந்தவரை மற்றவர்களைப் பற்றி நல்லதை மட்டும் கதைக்கப் பழகவேண்டும். இந்தமாதிரியான பழக்கத்தை எங்களுடன் வளர்க்கவேண்டும்.

சுவாமி சொல்கின்றார், உன்னுடைய எண்ணத்தால்கூட மற்றவர்களைப் புண்படுத்து கின்ற மாதிரி நினைக்காதே என்று. இதற்கு சுவாமியின் பழைய மாணவர் ஒருவருடைய அனுபவம் ஒன்று இருந்தது. இப் பழைய மாணவர் யார் எனில் ராம் நகரின் ராஜமாதா அவர்களுடைய பேரன். சுவாமியின் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டு இருந்தார். ராஜமாதாவிற்கு ஒரு உதவியாளர் இருந்தார். அவருடைய பெயர் கிஷோர். அவர் ராஜமாதா அவர்களின் குடும்பத்தில் இருந்து பல கோடிகள் மோசடி செய்து தப்பி ஓடிவிட்டார். அவருக்கு எந்தத் தண்டனையும் கொடுக்க முடியவில்லை. ராஜமாதாவின் பேரன் அப்போது சுவாமியின் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டு இருந்தார். அவருக்கு கிஷோர்மேல் பயங்கரமான கோபம். அவருக்கு எந்த தண்டனையும் கொடுக்கவில்லையே என்று கோபத்தில் இருந்தார். ஒருநாள் சுவாமியின் மந்திரில் இருந்து கொண்டு கிஷோரை அடித்துக் கொலை செய்வதைப் போல கண்களை மூடி கற்பனை செய்து கொண்டிருந்தார். ஒரு கொஞ்ச நேரத்தில் சுவாமியின் Interview அறைக் கதவு திறந்தது. கோபால் என்ன செய்கின்றாய் என சுவாமி கேட்டார். அதற்கு கோபால் ஒன்றும் இல்லை சுவாமி என்றார். சுவாமி உடனே கேட்டார், கிஷோரைப் பற்றித்தானே நினைத்துக் கொண்டு இருக்கின்றாய் என்று. அந்தப் பெயரைக் கேட்டவுடன் கோபாலுக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. உடனே சுவாமி நீங்களும் எதுவும் செய்யவில்லை. பொலிசாரும் எந்தத் தண்டனையும் கொடுக்கவில்லை என்று கோபத்தில் பேசினார். சுவாமி உடனே நான் எதுவும் செய்யவில்லையா? அதான் நீ கிஷோரை 3 தடவை கொலைசெய்வதைத் தடுத்தேனே என்று சுவாமி கூற அதற்கு கோபால் நான் எங்கு சுவாமி கொலைசெய்தேன்? அவ்வாறு கற்பனையில் மட்டும்தான் நினைத்தேன் என்று கூற சுவாமி சொன்னார், **ஆன்மீகத்தில் ஒருவரை மனதால் கொலை செய்வது என்று எண்ணினாலே அது கர்மாதான்.** ஆழமான எண்ணத்திற்கு ஏழு தடவைகள் விளைவுகள் ஏற்படும். ஆகவே நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிஷோரை 3 தடவைகள் கொலை செய்ய வேண்டும் என்று கற்பனையில் நினைத்ததால் 21 தடவைகள் கொலை செய்ததற்கான விளைவு உனக்கு வரப் போகின்றது என்று சுவாமி சொன்னார். ஆனால் இதை எல்லாம் கேட்கின்ற மனப்பாங்கு கோபாலிடம் இருக்கவில்லை. அந்தப் பையன் சொன்னார், சுவாமி கிஷோரை எல்லாம் மன்னிக்கின்ற மனப்பக்குவம் எனக்கு இல்லை சுவாமி என்றார்.

மன்னிப்பு என்ற விடயத்தை பற்றிக் கதைக்கும் போதுதான் ஒரு விடயம் ஞாபகம் வருகின்றது. ஒருதடவை சுவாமி அனில்குமார் Sir உடன் இருக்கும் போது சுவாமி ஒரு கடிதத்தைக் கொடுத்து, அனில்குமார் இதைப் படி என்று சொன்னார். அது அனில்குமார் Sir ஐப் பற்றிய Complaint கடிதம். ஒரு சுவாமியின் பல்கலைக் கழகத்தில் படிப்பிக்கின்ற விரிவுரையாளர் அனில்குமார் Sir ஐப் பற்றி தப்பாக எழுதிய கடிதம் இதை வாசித்தவுடன் சுவாமி அனில்குமார் Sir இடம் என்ன செய்யலாம் என்று கேட்டார். அதற்கு அனில்குமார் Sri இது உங்களுடைய பல்கலைக்கழகத்தில் படிப்பிக்கின்ற உங்களுடைய விரிவுரையாளர் எழுதிய முறைப் பாட்டுக் கடிதம் சுவாமி. நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தாலும் ஏற்கிறேன் சுவாமி என்றார். அதற்கு சுவாமி இது உனக்கு எதிரான நடவடிக்கை எடுக்க இதைக் கேட்கவில்லை. அந்த விரிவுரையாளரை பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறச் சொல்லவா என்று கேட்டார். அதற்கு அனில்குமார் Sir, சுவாமி அவர் இப்போது இளம் பருவத்தில் இருக்கிறார். அறியாமையினால் தெரியாமல் பிழை செய்துவிட்டார். அவரை பெரிய மனசுவைத்து மன்னியுங்கள். எனக்கு அவர்மேல் எந்தக் கோபமோ மனஸ்தாபமோ இல்லை சுவாமி, அவர் வளர வளர கற்றுக்கொள்வார் சுவாமி என்றார். உடனே சுவாமி அனில்குமார் Sir ஐ கட்டித் தழுவினார். இதைத்தான் நான் எதிர்பார்க்கின் றேன் என்று கூறி மிகவும் மகிழ்ச்சியடைந்தார் சுவாமி. **மற்றவர்கள் எமக்கு என்ன செய்தாலும் அவர்களை மன்னிப்பது சுவாமி எங்களிடம் எதிர்பார்க்கும் ஒரு அடிப்படையான குண இயல்பாகும்.**

இப்போது கோபாலுடைய கதையை தொடருவோம். கோபாலும் கிஷோரை மன்னிக்கும் நிலையில் இல்லை. எனவே சுவாமி கோபால் நீ கண்களை மூடி கிஷோரை அடிப்பது போலவே கற்பனை செய் என்றார். கோபாலும் சுவாமியே சொல்லிவிட்டாரே என்று சந்தோசத்தில் கிஷோரை கற்பனையில் அடித்துக் கொண்டு இருந்தார். ஒரு சில நேரத்தில் அவர் கற்பனை செய்தகாட்சி மாறுகின்றது. ஒரு மலைப்பகுதியின் உச்சி தெரிகிறது. கற்பனையில் கிஷோர் மலை உச்சியில் இருந்து விழுகின்ற நிலைக்கு வருகின்றபோது கோபாலும் இது நல்லதுதான் என்று நினைதார். அதே கணம் கிஷோரின் கையில் ஒரு அழகான குழந்தை தென் படுகின்றது. அக் குழந்தையும் கிஷோருடன் சேர்ந்து விழுகின்றது. உடனே கோபால் குழந்தையை காப்பாற்ற வேண்டுமே என்று முயற்சி செய்கின்றார். ஆனால் கிஷோரைக் காப்பாற்றினால்தான் அக் குழுந்தையைக் காப்பாற்ற முடியும். ஆகவே இருவரையும் கோபால் காப்பாற்றுகின்றார். காப்பாற்றும் வேளையில் கிஷோர்மேல் கோபாலுக்கு இருந்த கோபம் போய்விட்டது. கண்களைத்திறந்தார். இப்போது சுவாமி கேட்டார், கோபால் உனக்கு கிஷோர்மேல் கோபம் இருக்கின்றதா என்று கேட்க இல்லை சுவாமி என்றார்.

எங்களுடைய எண்ணத்தைக் கட்டுப் படுத்துவது மிகவும் கடினம். எங்களுக்கு ஒருவருடன் வெறுப்பு ஏற்பட்டால் அவரின்மீது கோபம் வருவது எல்லாம் நாங்கள் எத்தனையோ பிறவிகளில் கொண்டு வந்த வாசனையை சார்ந்தது. ஆகவே மற்றவருக்கு தீங்கு நினைக்காமல் இருப்பது கஷ்டமான விடயமாக இருந்தாலும் நாங்கள் மற்றவர்களைப் பற்றி தவறாக நினைக்கக்கூடாது. இது தவறு என முதலில் எம்மனதில் ஆழமாக நினைக்க வேண்டும். அடுத்தது அதில் இருந்து எவ்வாறு வெளிவருவது என்று அதற்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

இந்த கோபாலின் அனுபவத்தில் இருந்து முதலில் கிஷோர்மேல் கோபம் ஏற்பட்டது. பின்பு அந்தக் குழந்தையைப் பார்த்தவுடன் அந்தக் குழந்தையை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் கோபாலுக்கு கிஷோர்மேல் இருந்த கோபத்தை இல்லாமல் செய்துவிட்டது. ஆகவே சுவாமி சொல்கின்றார், எதைப்பற்றி நினைக்கும் போது எங்களுடைய மனதில் எல்லையில்லாத அன்பு வருகின்றதோ அதைப்பற்றி நினைத்து விட்டு அவ் அந்த அன்பு வட்டத்திற்குள் நாம் வெறுப்பு கொள்ளும் நபரை கொண்டு வரவேண்டும் என்று.

இதற்கு சுவாமி அழகான ஒரு உதாரணம் கூறுகின்றார். உனக்கு நீ பக்கத்துவீட்டு நபருடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை வருகின்றது. அவரைப் பார்த்தவுடன் வெறுப்பு வருகின்றது. அவருடைய வீட்டைக் கடந்து செல்கின்றாய். அவரை பார்க்கக்கூடாது என்று நினைத்து விட்டு எதிர்பாராத விதமாக அவருடைய வீட்டைப் பார்க்கின்றாய். வீட்டின் சுவரில் சுவாமியின் படம் தெரிகின்றது. சுவாமியின் படத்தைப் பார்த்தவுடன் கோபம் வருமா? அன்பு வருமா? பிடிக்காதவர் வீட்டில் சுவாமியின் படம் இருந்தால்கூட என்னுடைய சுவாமி என்ற நினைப்புதான் வரும்.

வாழ்க்கையில் எத்தனையோ பேரைப் பார்க்கின்றோம். எமக்குப் பிடித்தவர்கள் பிடிக்காதவர்கள் என்று எத்தனையோ பேர். **ஒரு உண்மை என்னவெனில் அவர்கள் எல்லோருக் குள்ளும் இருக்கிறது நம்ம சுவாமிதான்.** பிடித்த விசயத்தை நினைத்தால் யாருக்கும் அன்பு அளவுகடந்து வரும். எமக்கு எல்லோருக்குமே மிகவும் பிடித்த விசயம் சுவாமி மட்டும்தான். சுவாமி சொல்கின்றார் நான்தான் எல்லோருடைய இதயத்திலும் இருக்கின்றேன் என்று. எல்லோருமே என்னைச் சேர்ந்தவர்கள் என்று. ஆகவே எமக்கு பிடித்த சுவாமி எல்லோருக்குள்ளும் இருக்கும்போது எவ்வாறு மற்றவர்களைப் புண்படுத்தவேண்டும் என்ற எண்ணம் வரும்?

Hurt Never இன் அதி உச்சக்கட்டநிலை நாம் யாரைத் துன்புறுத்தினாலும் என்னையேதான் துன்புறுத்திக்கொள்கின்றேன் என்ற அதிஉயர் நிலை. இதை அடைய நாங்கள் பயிற்சி செய்யவேண்டும். சுவாமி சொல்கின்றார், If you don't serve, it is ok, but don't hurt. எம் சுவாமி சொல்கின்ற ஒருபோதும் துன்புறுத்தாதே என்ற விடயம் எங்களுடைய அடிப்படை குணாதிசயமாக அமையவேண்டும்.

## பாகம் 03

The bestway to love God is to Love All and Serve All. அதாவது சுவாமி மீது பக்தி காட்ட வேண்டும் என்றால் சிறந்த வழி எல்லோரையும் நேசித்து அனைவருக்கும் சேவை செய்ய வேண்டும். சுவாமி எல்லோர்மீதும் ஒரே அன்பைத்தான் காட்டுகின்றார். அவருக்கு வேறுபாடு எதுவுமே இல்லை. யார் என்றாலும் சுவாமி காட்டுகின்ற அன்பு ஒரேமாதிரித்தான் இருக்கும். இந்த நிலையை அடைவதற்குதான் நாம் அனைவரும் முயற்சி செய்யவேண்டும்.

முதலில் Love All என்று பார்க்கும் போது நாம் அனைவருமே ஏதோ ஒரு வகையில் மற்றவர்கள்மீது அன்பு காட்டுகின்றோம். குடும்பத்தில் அம்மா குழந்தைமீது, குழந்தை பெற்றோர் மீது, ஆசிரியர் மாணவர்கள்மீது ஒதோ ஒரு விதமாக அன்பு காட்டுகின்றனர். சேவை செய்கின்றனர். சுவாமி கூறுகின்றார், எம்முடைய வாழ்க்கையே மற்றவர்களுக்கு சேவையா கத்தான் இருக்க வேண்டும். இப்போது அன்பு, சேவை என்று பார்த்தோம். ஆனால் நம்முடைய வாழ்க்கையில் யார்மேலாவது அன்பு வைத்திருக்கின்றோம், யாருக்காவது சேவை செய்கின்றோம். எது கடினமானது என்றால் எல்லோர் மேலும் அன்பு வைப்பது Love All என்பதாகும். ஆனால் சுவாமி, **எல்லோர் மீதும் அன்பு காட்டுவது என்பது எனக்கு உண்மையான பக்தியை செலுத்துவது ஆகின்றது** என்று கூறுகின்றார்.

**Love என்ற வார்த்தைக்கு மமதா** என அர்த்தம் உள்ளது. இது மமத்துவம் என்ற வார்த்தையில் இருந்து வருகின்றது. மமத்துவம் என்றால் என்னுடையது என்ற பொருள்படும். நம் எல்லோருக்குமே ஒரு வட்டம் இருக்கின்றது. அவ் வட்டத்திற்குள் இருக்கின்றவர்களுக்கு நாம் அன்பு செலுத்துவது சுலபம். ஏன் எனில் அவர்கள் யாவருமே எம்மைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். உதாரணமாக என்னுடைய குழந்தை, என்னுடைய மனைவி, என்னுடைய அப்பா, என்னுடைய நண்பன், என்னுடைய மதத்தைச் சார்ந்தவன். இந்தமாதிரி என்னுடைய என்ற ஆழ்ந்த விடயம் அதனுள் அடங்கும். அதனால் அங்கு அன்பு தானாகவே வரும். அதாவது **யார்மேல் எமக்கு மமத்துவம் இருக்கின்றதோ அவர்மீது மமதா** வரும். அதுதான் சுவாமி எமக்குத் தரும் முதலாவது புதிர் (முதலாவது பயிற்சி). இதற்கு சுவாமி ஒரு அழகான சின்னக்கதையை கூறுவார். ஒரு ஊரில் இரண்டு குடும்பங்கள் இருந்தன. ஒரு குடும்பத்தில் அம்மா, அப்பா, பையனும் மற்றைய குடும்பத்தில் அம்மா, அப்பா, பெண்ணும் இருந்தனர். அந்தப் பெண்ணிற்கு சிறுவயதாக இருக்கும் போது கடுங்காய்ச்சல் ஏற்பட்டு அதிதீவிர சிகிச்சையில் இருந்தாள். சாகப்போகும் நிலையில்கூட இருந்தாள். இதனை அந்த பக்கத்துவீட்டு பையன் அறிந்தான். ஆனால் அவளுடைய இந்த செய்தியால் ஒரு சிறு அனுதாபம் மட்டுமே வந்தது. கவலை உணர்வு எதுவுமே பெரிதாக வரவில்லை. நாட்கள் கடந்து போக அந்த குடும்பத்தினர் அந்தப் பெண்ணிற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையனுக்கும் திருமணம் செய்து வைத்தனர். திருமணம் முடிந்தபின்னர் ஒருநாள் அப் பெண்ணிற்கு சாதாரண தலைவலி ஏற்பட்டது. உடனே அந்தப் பையன் மிகவும் பதட்டம் அடைந்தான். துடித்துப் போகின்றான். இதே பையன்தான் அந்தப் பெண் உயிருக்குப் போராடும் நிலையில் இருந்தபோது அவனுக்கு அது அதிக வலியை ஏற்படுத்தவில்லை. ஆனால் அப்பெண் அவனுடைய மனைவியாக மாறிய பின்பு அவனால் அப்பெண்ணின் சிறு தலை வலியைக் கூட தாங்க முடியவில்லை. இங்கு என்னுடைய மனைவி என்ற நினைப்பு. அதுதான் அந்த மமத்துவம். இது என்னுடையது என்று நினைக்கும்போது அதன் மேல் அன்பு என்ற உணர்வு வருகின்றது.

Dr. ஜோண் ஹிஸ்லாப் சுவாமியின் பக்தர். இவர் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவுடன் உரையாடல் என்ற புத்தகத்தை எழுதியவர். இந்தப் புத்தகம் சுவாமியிடம் கேட்ட கேள்விகள், அதன் பதில்களுக்கான மொழி பெயர்ப்பு ஆகும். ஆகவே எப்போது எல்லாம் ஹிஸ்லாப் சுவாமியுடன் இருக்கின்றாரோ அப்போதெல்லாம் ஒரு ஒலிப்பதிவுக் கருவியை தன்னுடன் வைத்திருப்பார். ஒருநாள் **சுவாமியிடம் அன்பு என்றால் என்னவென்று கேட்டார்**. அதற்கு சுவாமி உதாரணத்துடன் விளக்கம் கூறினார். அதாவது இந்த ஒலிப்பதிவுக் கருவியை நீ வாங்கமுன் அது ஒரு கடையில் இருந்தது. அதனை நீ அந்தக் கடையில் இருக்கும் போது திரும்பிப் பார்த்துக் கூட இருக்க மாட்டாய். ஆனால் அதனை வாங்கிய பின்பு மிகவும் கவனமாக பாவிக் கின்றாய். இதுதான் அன்பின் அடிப்படை. எது என்னுடையது என்று நினைக்கின்றாயோ அந்தப் பொருள்மீதோ அல்லது நபர்மீதோ அன்பு வைப்பது எளிமை ஆகிறது என்பதை தாண்டி அது ஒரு இயல்பு ஆகின்றது.

ஆகவேதான் நாம் எல்லோர்மீதும் அன்பு வைக்க வேண்டும் என்பதை நாம் பயிற்சி செய்வது முதலாவது புதிர். எம்மைச் சார்ந்தவர்கள் என்று நாம் வைத்திருக்கும் வட்டத்தை பெரிதாக்க வேண்டும். சுவாமி ஒரு ஆரம்ப வகுப்பில் படிக்கின்ற பையனிடம் கேட்டாராம், "உனக்கு சகோதரர்கள் இருக்கின்றனரா?". அதற்கு அப் பையன், சுவாமி ஆம் சுவாமி இங்குதான் படிக்கின்றார் என்று. அதற்கு சுவாமி Badboy, இப்படி சொல்லக்கூடாது. எப்பவுமே "எல்லோருமே என்னுடைய சகோதரர்கள்" என்று சொல்ல வேண்டும் என்றார். பின்பு சிலநாட்களுக்குப் பின்பு அந்தப் பையனிடமே, "உனக்கு சகோதரிகள் இருக்கின்றனரா?" என்று சுவாமி கேட்டார். அதற்கு அந்தப் பையன், ஆம் சுவாமி, ஒரு சகோதரி என்றான். அதற்கு சுவாமி, "Bad boy, அப்படிச் சொல்லக்கூடாது. All are my sisters என்று சொல்ல வேண்டும்" என்று சொன்னார். மறுபடியும் அந்தக் குட்டிப் பையனுடன் விளையாடுவதற்கு சுவாமி கேட்டாராம், "உனக்கு மனைவி இருக்கிறாளா?" என்று. அதற்கு அப்பையன் ஆம் சுவாமி, எல்லோருமே எனது மனைவிகள் என்று சொல்ல சுவாமி மிகவும் சிரித்தார். சுவாமி சிறுவயதிலேயே அந்தப் பையனுக்கு, எல்லோருமே எனது சகோதரர்கள், எல்லோரும் எனது சகோதரிகள் என்ற விடயத்தை சிறுவயதிலேயே சிறிது சிறிதாக தூண்டுகின்றார். நாம் சாயி நிறுவனத்தில் எத்தனையோ பேரைப் பார்க்கின்றோம். சாயிராம் என்று கூறும்போது அவர்கள் சுவாமியை சார்ந்தவர்கள், எம்மைச் சார்ந்தவர்கள் என்ற உணர்வு எம்மை அறியாமலே வருகின்றது. சாயி நிறுவனங்களில் ஜாதி இல்லை, மதம் இல்லை, பணக்காரன் இல்லை. ஏழை இல்லை. எல்லோரும் சுவாமியைச் சார்ந்தவர்கள் என்ற எண்ணத்தில் ஒன்றுசேர்ந்து சேவை செய்கின்றோம். இது எம்மைச் சார்ந்தவர்கள் என்ற வட்டத்தை மேலும் பெரிதாக்கும் ஒரு தூண்டுகோல் ஆகின்றது.

மமத்துவம் என்றால் ஒரு பிரச்சினையும் இருக்கின்றது. மமத்துவம் என்ற பாவத்தில் இருந்துதான் பற்று என்ற விடயமும் வருகின்றது. ஆகவே பற்றும் எம்மைவிட்டுப் போகவேண்டும். இங்கு இரண்டு விடயம் நடக்கவேண்டும். எம்மைச் சார்ந்தவர் என்ற வட்டம் பெரிதாகி ஒரு கட்டத்தில் அவ்வட்டம் இல்லாமல் போக வேண்டும். அதுவே இறுதியான நிலை ஆகின்றது.

Mineness என்ற விடயத்தைத் தாண்டி நம்மளை நானே ஒரு நபரிடம் பார்க்கும்போது அது தூய்மையான அன்பாக மாறுகின்றது. இதனை விளக்கமாகக் கூறினால் சுவாமியின் அன்பை ஏன் நாங்கள் ஆயிரம் தாய்மாரின் அன்பிற்கு மேலான அன்பு என ஒப்பிடுகின்றோம்? இதை 1000 நண்பர்களின் அன்பு, 1000 தந்தையரின் அன்பு என ஒப்பிட்டிருக்கலாமே? அதற்கு காரணம், தாய் குழந்தையை 9 மாதம் சுமக்கின்றாள். அதனை தன்னுடைய குழந்தை என்பதைத் தாண்டி இது என்னுடைய உயிர். இது நான் என்ற எண்ணம் எப்பவுமே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே எப்போதும் நாம் எம்மை அந்த நபரில் பார்க்கின்றோம் என்ற நினைப்பு வரும்போது அன்பு தூய்மை ஆகின்றது.

சுவாமியினுடைய அன்பு நேர்த்தியானது என்று ஏன் சொல்கின்றோம் என்றால் அந்த நேர்த்தியினுடைய இரகசியம் **தன்னை மற்றவர்களுள் காண்பதே ஆகும்.** எப்போது இந்த சாதனை நேர்த்தி ஆகின்றதோ அப்போது எம்மை அனைவரின் உள்ளும் பார்ப்போம். அப்போது எல்லோரிடமும் அன்பு செய்யும் நிலையை அடைவோம்.

**அன்பு என்பதற்கு இன்னுமொரு அர்த்தமும் உண்டு. அதாவது அனுராகம்.** அனுராகம் என்ற வார்த்தை ராக என்ற வார்த்தையில் இருந்து வரும். ராக என்றால் விருப்பம் என்று அர்த்தம். ஆகவே யாரை எமக்கு பிடிக்குதோ அவர்கள் மீது அன்பு வைப்பது எளிமை ஆகின்றது. எங்கே விருப்பம் இருக்கிறதோ அங்கே அன்பு அன்பு இலகு வாகிறது. ஆகவே யாரைப் பார்க்கும்போது நல்லவர்கள் என்று நினைக்கின்றோமோ அவர்களை எமக்குப் பிடிக்கும். அவர்கள்மீது அன்பு செலுத்துவது எளிதாகின்றது. எனவே நாம் யாரைப் பார்த்தாலும் அவர்கள் எம்மை துன்பப் படுத்துபவர்களாக இருக்கலாம் அல்லது குறை கூறுபவர்களாக இருக்கலாம். யாராக இருந்தாலும் நாம் அவர்களிடம் இருக்கின்ற நல்ல விடயத்தை மட்டும் கவனத்தில் எடுக்கவேண்டும். அது என்னவென்றாலும் இருக்கலாம். அவர்களுடைய திறமை பேச்சுத்திறன், உடை, கலாச்சாரம் எதாவது மற்றவர்களிடம் இருக்கும் நல்லதை கவனத்தில் எடுக்கவேண்டும். அவர்களிடம் இருக்கின்ற தீய விடயத்தில் கவனம் செலுத்துவதைத் தவிர்க்க வேண்டும்
.

ஒருமுறை கிருஷ்ணர் துரியோதனனை அழைத்து அஸ்தினாபுரத்தில் உள்ள நல்லவர் ஒருவரையாவது அழைத்து வரும்படி கேட்டார். அதேபோல யுதிஷ்டிரரிடம் அஸ்தினாபுரத்தில் உள்ள கெட்டவனை என்னிடம் அழைத்து வரும்படி கேட்டார். துரியோதனன் திரும்ப வந்து அஸ்தினாபுரத்தில் யாருமே நல்லவர் இல்லை என்று கூறினார். யுதிஷ்டிரர் அஸ்தினாபுரத்தில் யாருமே கெட்டவர் இல்லை என்று கூறினார். யுதிஷ்டிரர் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் நல்லதைச் செய்கின்றனர் என்று கூறினார்.

ஆகவே நாம் எப்போதும் மற்றவர்களிடம் உள்ள நல்ல விடயத்தை மட்டும் கவனத்தில் எடுக்கவேண்டும். சுவாமி ஒருமுறை கூறினார், நீங்கள் யாரையும் பார்த்து அந்த நல்லகுணம் எனக்கு பிடித்திருக்கின்றது என்று சொல்லி அவரைப் பார்த்தாய் என்றால் அந்தக் குணம் உனக்குள் வரும். அதுவே யாரையும் பார்த்து அவர்களை மோசம் என்று சொல்கின்றோமோ அவர்களுடைய தீயகுணம் உனக்குள் வந்துவிடும்.

**ஆகவே Love All என்ற விடயத்தை நாம் எங்களுடைய வாழ்க்கையில் பயிற்சி செய்யவேண்டும் என்றால் எம்மைச் சார்ந்தவர் என்ற வட்டத்தை பெரிதாக்கி இறுதிநிலையாக அதை இல்லாமல் செய்யவேண்டும். அடுத்து மற்றவர்களிடம் உள்ள நல்லவற்றை மட்டும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதாகும்.**

ஜெய் ஸாயிராம்

தொகுப்பு : செல்வி ஸ்ரீபவதாரணி,
மந்திகை சாயி நிலையம்
வடபிராந்தியம்.


## தேசிய சேவைத் திட்டம்



**சத்திய சாயி முதியோர் இல்லம் - மீகொட - கொழும்பு**

**இது 32 கி.மீ கொழும்பிலிருந்து அமைந்துள்ளது. ஆரம்பத்தில் 20 வெண்களும் 20 ஆண்களும் பராமரிப்பதென திட்டமிடப்பட்டு கட்டடத்திற்கான பூமி பூஜை 28.05.2015 இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த முதியோர் இல்ல கட்டடம் 2017.04.30 திகதியன்று இலங்கை அரசின் சபாநாயகர் கௌரவ கரு ஜெயசூரியா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இச் சேவைப்பணியிலும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தெலைபேசி: 0094 112687014, 0094 777316935
E mail - info@ssiosrilanka.org
website: www.ssiosrilanka.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















சத்திய சாயி சர்வதேச நிறுவனம் - சர்வதேச மாநாடு - கென்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













MATHI COLOURS
Nallur, 0212229285



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org